Registered as a Newspaper

# உதயன்

சஞ்சீவி

விலை ரூ. 60

பக்கங்கள் 24

சுடர் : 38
கதிர் : 22

ஞாயிற்றுக்கிழமை 18 டிசெம்பர் 2022

மார்கழி 03 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2053

இன்று புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவச் செல்வங்கள், தெளிந்த அறிவுடனும் திடமான மன தோடும் பரீட்சையை எதிர்கொள்ள உதயனின் நல்வாழ்த்துக்கள்.



# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண உதவுக

## எரிக் சொல்ஹெய்மிடம் மனோ கோரிக்கை

**கொழும்பு, டிசெம்பர் 18**

உங்கள் அனுபவத்தைப் பயன்படுத்த இது தான் சந்தர்ப்பம், நல்ல தருணம். பிரிபடாத இலங்கைக்குள் நிரந்தரத் தீர்வை அடைய எமக்கு உதவுங்கள் - என்று இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்மிடம் கோரிக்கை விடுத்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். »15

## பாணின் விலை ரூ.10 குறைப்பு!

கொழும்பு, டிசெ. 18
சந்தையில் பாணின் விலையை குறைப்பதற்கு வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, 450 கிராம் நிறை கொண்ட »15

## கிருமித்தொற்றால் ஆண் சிசு இறப்பு

யாழ்., டிசெ. 18
பிறந்து ஒரு மாதமேயான ஆண் சிசுவொன்று வயிற்றோட்டத்தால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளது. »15

## வியட்நாமில் உயிரிழந்தவரின் சடலம் வந்தது இலங்கைக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 18
வியட்நாமில் தவறான முடிவெடுத்து உயிரிழந்த, யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம் விமானம் மூலமாக »15

வடக்கு மாகாண

## கல்வித் திணைக்களத்தில் அதிகாரியால் பணமோசடி!

### விசாரிப்பதற்கு தனிக்குழு

யாழ்ப்பாணம், டிசெ. 18
வடக்குமாகாண கல்வித் திணைக்களத்தின் நிதிக் கிளையில் கடமையாற்றும் அதிகாரியொரு »15

வடமராட்சி கிழக்கில்

## மியான்மர் அகதிகளுடன் கரையொதுங்கிய கப்பல்

விரிவு: - பக்.15

## காரைக்கால் - காங்கேசன் கப்பல்சேவை பெப்ரவரியில்

யாழ்ப்பாணம், டிசெ. 18
காரைக்கால் - காங்கேசன்துறை இடையிலான கப்பல்சேவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்கும் என்று »15

DFCC தங்கவரம்
தங்கநகை அடகுச் சேவை
24 கரெட் தங்கப் பவுணுக்கு
ரூ. 115,000/-
அதிகூடிய முற்பணத் தொகை மற்றும்
அதிகுறைந்த மாதாந்த வட்டி வீதம்
அவசரத் தேவைக்குப் பணம் தேவையெனில் வீட்டில்
இருக்கும் தங்க நகையை எடுத்துக்கொண்டு
DFCC வங்கிக்கு வாருங்கள்.
0112 350000 www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



CMG
வீடெங்கும்
சந்தோஷத்தைப் பாதுகாக்கும்
S-lon inside
சுவர்களுக்குள் ஓடும் நீர்க் குழாய்கள் வீட்டிலே
சந்தோஷத்தைப் பாதுகாக்கத் துணை நிற்கின்றன.
உங்கள் வீட்டுச் சுவர்களுக்குள்ளும்
S-lon inside என்றால்
உங்கள் சந்தோஷம் என்றுமே நிலைத்திருக்கும்.
எஸ்-லோன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட். 315/7, டி.பி ஜெயா மாவத்தை, கொழும்பு 10
தொ.பே: 011 4 760 100 | பக்ஸ்: 011 4 760 170, 4 760 125
மின்னஞ்சல்: slonsales.slon@cmg.lk | f www.facebook.com/slonlk
S-lon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டண உயர்வுக்கு சட்டநடவடிக்கை

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு எச்சரிக்கை




கொழும்பு, டிசெ. 18

மின்சாரக்கட்டணத்தை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு சட்டநடவடிக்கை ஊடாக தடையேற்படுத்துவோம். மின்கட்டண அதிகரிப்புக்கு ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும். தற்துணிவுடன் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற்சித்தால் நீதிமன்றை நாடுவோம்.

இவ்வாறு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணம் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டது, ஒவ்வொரு ஆண்டும் இருமுறை மின்சாரக் கட்டணம் மறுசீரமைக்கப்பட வேண்டும். அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டு முதல் கட்டண மறுசீரமைப்புக்கான யோசனை முன்வைக்கப்பட்டது. அதன்படி ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை கிடையாது. தற்துணிவுடன் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற்சித்தால் அதற்கு எதிராக நீதிமன்றை நாடுவோம் - என்றார். (ச-இ)



## தினேஷ் சாப்டர் கொலை: விசாரிப்பதற்கு 4 குழுக்கள்

கொழும்பு, டிசெ. 18

குற்றப்புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவு உள்ளிட்ட நான்கு குழுக்கள் தினேஷ் சாப்டர் மரணம் தொடர்பில் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளன எனப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனசக்தி குழுமத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் சாப்டர் பொரளை பொதுமயானப் பகுதியில் தனது காரில் கைகள் கட்டப்பட்டு கொடூரமாக சித்திரவதைக்குட்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தினேஷ் சாப்டரின் கைகள் பின்புறமாக ஒருவகையான பிளாஸ்ரிக் வயரால் கட்டப்பட்டிருந்தன எனவும் அவருடைய கழுத்தும் வயரினால் கட்டப்பட்டு கழுத்து இறுக்கப்பட்டமையினாலே அவர் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

தினேஷ் சாப்டரிடம் பல லட்சம் ரூபாவை பெற்று மீண்டும் வழங்காமை தொடர்பில் பிரையன் தோமஸ் எனும் சந்தேகநபர் மீது பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த சந்தேகநபர் வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அத்துடன் தினேஷ் சாப்டர் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசியின் அழைப்பு தொடர்பான தொலைத்தொடர்பு பகுப்பாய்வு மேற்கொள்ள நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத செயற்பாடு தொடர்பில் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கமைய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன- என்றார்.

இதேவேளை தமது உணர்வுகளுக்கு மதிப்பளித்து உண்மைகளை வெளிக்கொணர்ந்து நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என மறைந்த ஜனசக்தி குழுமத்தின் தலைவர் தினேஷ் சாப்டரின் குடும்பத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-இ)

## இருதினங்களுக்கு 2 1/2 மணிநேர மின்வெட்டு!

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் இருதினங்கள் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கு மின்துண்டிக்கப்படும்.

இதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது என மின்சார சபை அறிவித்துள்ளது. அதற்கமைய 'ஏ' முதல் 'எல்' மற்றும் 'P' முதல் 'W' ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் பகல் வேளையில் ஒரு மணித்தியாலமும் இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படும் என மின்சார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கோத்தாபயவின் ஊடகப்பணிப்பாளர் கைது

கொழும்பு, டிசெ. 18

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஊடகப் பணிப்பாளராக செயற்பட்டவர் கண்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, ராஜதந்திரிகளின் தொடரணிக்கு தடங்கல் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## சட்டவிரோதமாகச் சென்றோர் திருப்பி அழைக்கப்படுவர்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 18

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் குடியகல்வு சட்டத்துக்கு முரணாக நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் நெருக்கடிக்குள்ளானவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து முறையாக வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்பவர்கள் அங்கு ஏதேனும் நெருக்கடிக்குள்ளானால் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு உரிய தூதரகங்களுக்கு உண்டு.

முறையற்ற வகையில் செல்பவர்களைத் தூதரகம் பொறுப்பேற்காது.

முறையற்ற வகையில் வெளிநாடு சென்று அங்கு நெருக்கடிக்குள்ளானவர்கள் முன்வைக்கும் ஒரு சில கருத்துக்கள் இராஜதந்திர மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்தநிலை தொடர்ந்தால் முறையான வழிமுறையில் கூட இலங்கையர்கள் ஒரு சில நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காகச் செல்ல முடியாத நிலை ஏற்படும் - என்றார். (ச-இ)

## எதிர்வரும் நாள்களில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ. 18

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் நாள்களில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை, மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

எனவே பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இதேவேளை காற்று தரச்சுட்டெண்ணில் நாளுக்கு நாள் மாற்றங்கள் ஏற்படுவதால் சுவாசப் பிரச்சினைகள் உடையோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம் மருத்துவமனை மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ. 18

சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம் தொடர்பிலான அனைத்து குற்றச்சாட்டுக்களையும் மறுத்து தமது மருத்துவமனையின் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி சுகாதார அமைச்சு விடுத்த தடைக்கு எதிராக மருத்துவமனை நிர்வாகம் நீதிமன்றை நாடியுள்ளது.

மருத்துவமனையின் தலைவர் மருத்துவமனை சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் கட்டளை நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர். எமது மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் அனைத்து சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளும் தெளிவான, வெளிப்படையான மற்றும் நிறுவப்பட்ட சட்ட நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றன.

சிறுநீரக மோசடி மற்றும் பணம் பறிப்பு உட்பட முழு சம்பவமும் ஒரு திட்டமிட்ட, சூழ்ச்சியான ஊடக நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டது. சுகாதார அமைச்சின் அனுமதியின் பேரில் மட்டுமே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்று குறித்த தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் இரு சிறுநீரக நோயாளிகளின் நலன்கள் தொடர்பில் உடனடியாக ஆராயுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு உத்தரவிட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவனுக்குச் சூடு ஆசிரியருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 18
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முன்பள்ளி மாணவனின் வாயில் நெருப்புக்குச்சியால் சூடு வைத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்பள்ளி மாணவன் தகாத வார்த்தைகளைப் பேசுகின்றான் என்று தெரிவித்து முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் மாணவனின் வாயில் நெருப்புக்குச்சியால் சூடு வைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய முன்பள்ளி ஆசிரியர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அதன்போதே ஆசிரியரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர், மாணவனுக்கு நெருப்புச்குச்சியால் சுட்டமை சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-14,125)

# வல்லரசுகளின் போட்டியில் பக்கம் சாரவில்லை இலங்கை



### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18

உலகின் வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் இலங்கை எந்தவொரு அணியுடனும் ஒத்திசைந்து செயற்படவில்லை. சுயாதீனமான அணிசேரா நிலைப்பாட்டிலிருந்தே செயற்படுகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தியத்தலாவை இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சிகளை நிறைவு செய்த இராணுவச் சிப்பாய்களுக்கு பதக்கமளிக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டைப் போன்றே நாட்டின் அரசமைப்பையும் பாதுகாக்கவேண்டும். அதன் மூலமே நாட்டைப் பாதுகாக்க முடியும். நாட்டை அந்நியர்களிடமிருந்தும் பாதுகாக்கவேண்டும். இந்த இரு காரணிகளுமே உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதை நீங்கள் நிறைவேற்றவேண்டும். நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் உங்களுக்குப் பயிற்றுவித்த நிறுவனத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். அந்த நற்பெயரை மேலும் மேம்படுத்துங்கள்.

இந்து சமுத்திரத்தில் எமது நாடு ஒரு சிறிய தீவாகும். நாம் உலக சக்திகளுடன் ஒவ்வொரு குழுவில் இணையவில்லை. எந்தவொரு குழுவுடனும், உலக சக்திகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளப் போவதில்லை, உலகில் தனி நாடாகக் காணப்படுகின்றோம். எம்மைப் போன்று சிறிய தனித்துள்ள நாடுகள் பல உள்ளன. இவ்வாறிருக்கும் போது ஏனைய நாடுகளுடனான நட்புறவைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு காணப்படுகிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சவால்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை ஏற்று புத்திக்கூர்மையுடன் செயற்பட வேண்டும். அச்சமின்றி முன்னோக்கிச் செல்வதற்கான சக்தி காணப்படவேண்டும். நாடு உங்களிடம் கொண்டுள்ள எதிர்பார்ப்பை நிறைவேற்றுங்கள் - என்றார். (எ-இ)

## கசிப்புக் காய்ச்சிய நபருக்கு மறியல்!

சாவகச்சேரி, டிசெ. 18
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி மயானப் பகுதியில் நீண்டகாலமாக கசிப்புக் காய்ச்சிய நபருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாலாவி மயானப் பகுதியில் நீண்டகாலமாக கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்யப்பட்டு வந்தது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாலாவி வடக்குப் பகுதியிலுள்ள பெண்கள் கடந்த முதலாம் திகதி போராட்டம் நடத்தினர். அதனையடுத்து சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மற்றும் படையினர் இணைந்து அங்கு சென்ற வேளையில் கசிப்புக் காய்ச்சிய சந்தேகநபர் தப்பிச் சென்ற நிலையில் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் , கோடா மற்றும் கசிப்பு ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இதுதொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் முன்னெடுத்திருந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய சந்தேகநபர் கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (எ-14,9)

## பேச்சுக்களில் மட்டும் ஈடுபட்டால் நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்காது

### சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 18
ஐ.நா. கூட்டத்தொடரில் தீர்க்கமான முடிவுகளை எட்டாமல் சமாளிக்கவும், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவுமே இலங்கை அரசாங்கம் தமிழ் தரப்புகளுடன் பேச்சுக்களை மேற்கொள்கின்றது. நாங்கள் தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்போமானால் எமக்குத் தீர்வு கிடைக்காது. மாறாக நமது இனம் நெருக்கடிக்குள் மட்டுமே தள்ளப்படும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச சமூகத்தை சமாளிக்க 75ஆவது சுதந்திர தினத்துக்குள் தீர்வு தரப்போவதாக ஜனாதிபதி கூறுகின்றார். தமிழ்த் தரப்புகள் தற்போதும் மௌனமாக இருந்தால் நிலைமை மோசமாகிவிடும். இந்த நேரத்தில் தமிழர்கள் பொதுசன வாக்கெடுப்பைக் கோரி அதன்மூலம் தீர்வை அடைவதற்கு முயற்சிக்கவேண்டும். வெளிநாட்டு மத்தியஸ்தம் பொதுசன வாக்கெடுப்பு இல்லாமல் எந்தவொரு தீர்வையும் ஏற்கமுடியாது . 75 வருடங்களாகத் தீர்க்க முடியாத பிரச்சினையை 70 நாள்களுக்குள் தீர்ப்பதாகக் கூறும் பூச்சாண்டிக்குள் தமிழ்த் தரப்புகள் சென்று அகப்படக்கூடாது.

தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை சிங்கள தரப்புக்கு பல தடவைகள் தெளிவாகக் கூறப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தீர்வுக்கான பேச்சுக்கள் இடம்பெறவேண்டும். இல்லாவிடில் பேச்சுகளில் கலந்துகொண்டு பயனில்லை. இதைத் தமிழ்த் தரப்புகள் நேரகாலத்துடன் அறிவிக்க வேண்டும்-என்றார். (எ-14,27)

## கட்டுப்பாட்டை இழந்து தனியார் பஸ் விபத்து

வவுனியா, டிசெ.18
கட்டுப்பாட்டை இழந்த தனியார் பயணிகள் பஸ் வீதியை விட்டு விலகி கீழிறங்கி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் வவுனியா - மன்னார் பிரதான வீதியில், சாம்பல் தோட்டம் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே நேற்றுக்காலை நடந்துள்ளது.

இந்த விபத்தில் பயணிகளுக்கு எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை. விபத்துச் சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் தனியார் பயணிகள் பஸ்ஸும், வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் இ.போ.ச. பஸ்ஸும் போட்டியிட்டுச் சென்றதாலேயே இந்த விபத்து நடந்துள்ளது என்று பயணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-18)

## நாட்டை விட்டு வெளியேறிய விமானக் கட்டுப்பாட்டாளர்கள்

இலங்கையின் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் 38 பேர் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக அண்மைய காலத்தில் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர் என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் கிடைக்கும் சம்பளத்தில் வாழ்க்கையை கொண்டு நடத்துவது சிரமம் என்பதால், இவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். வேறு நாடுகளில் சிவில் விமானச் சேவை நிறுவனங்கள் அதிகளவிலான சம்பளம் மற்றும் வசதிகளை வழங்குவதன் காரணமாக இவர்கள் நாட்டைவிட்டுச் சென்றுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

இந்த நிலைமை காரணமாக இலங்கையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இது தற்போது நாட்டின் அனைத்துத் துறையிலும் காணப்படும் பொதுவான பிரச்சினை எனக் கூறியுள்ளார். (எ-இ)

## தேர்தல் வெற்றி வாய்ப்பு தேசிய மக்கள் சக்திக்கு!

### ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18
உள்ளூராட்சி சபைகள் அல்லது பொதுத் தேர்தல் எதுவாக இருந்தாலும் அடுத்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி பெறும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உலகம் பாரம்பரிய அரசியலில் இருந்து முன்னேறிவிட்டது. தற்போது தேர்தல்கள் சமூக வலைத்தளங்கள் மூலமே தீர்மானிக்கப்படுகின்றன. எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுள்ளது. தனது தரப்பால் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள், வர்த்தக சமூகம் மற்றும் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதை முதலில் நோக்கமாகக் கொண்டுள்ளோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 12 . 1936



இறப்பு 17 . 12 . 2022

## திருமதி கண்ணப்பர் அற்புதநாயகம்

துன்னாலையை பிறப்பிடமாகவும் பிருந்தாவனம், K.K.S. Road, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணப்பர் அற்புதநாய்கம் நேற்று (17.12.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா கண்ணப்பரின் (கிருஷ்ணாஸ் முன்னாள் பிரபல வர்த்தகர், தெல்லிப்பழை) அன்பு மனைவியும், முகுந்தன் (Australia), ஜெயந்தன் (UK), அஜந்தன் (Australia) ஆகியோரின் அன்புத் தாயும், அனுஷா, சந்தியா, பூம்பொழிலாள் ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்த்தி, வித்தகி, ராகுல், கவிஷா, காவியா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற வன்னியசிங்கம்- சிவநாயகம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், செல்வநாயகி (Sri Lanka), தாமோதரன் (UK), யோகநாயகி (US), காலஞ்சென்ற தியாகராஜா (Indonesia), செல்லையா (UK), காலஞ்சென்ற வெற்றிவேலு (UK), பாக்கியநாயகி (Sri Lanka), சிறிபிரகாசன் (Australia), நாகேஸ்வரி (Australia) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தவமணி (Sri Lanka), செல்வரத்தினம் (Sri Lanka), சோமசுந்தரம் (Malaysia), பரமேஸ்வரி (Australia), மனோன்மணி (Australia) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

தொலைபேசி : 021 205 9207

(CS 22290) 1/6


# மாபெரும் மலிவு விற்பனை!



மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களே!

பண்டிகை காலத்தை முன்னிட்டு வீட்டுக்குத்தேவையான இலத்திரனியல், மின்சாதனப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களை, பொருட்களுக்கு ஏற்ப 15% -35% வரையிலான விலைக்கழிவுடன் தரமானதாகவும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் நீங்கள் வாங்கும் பொருட்களின் பெறுமதிக்கேற்ப விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

இடம் - Electro Zone (Pvt)Ltd.
பழைய தபாற்கந்தோர் வீதி, (கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக)
இல, 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

காலம் - 19.12.2022 தொடக்கம் 14.01.2023 வரை

நேரம் - முற்பகல் 10.00 முதல் மாலை 6.30 வரை

குறிப்பு- வாடிக்கையாளர் வசதி கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும். மேலதிக விபரங்களுக்கு எமது முகநூல் பக்கத்தினை பார்வையிடவும்:

Facebook - Electro Zone Pvt Ltd.
Phone Number - 021 224 5225
Whatsapp - 077 120 8484

ELECTRO ZONE (PVT) LTD

Importers, Wholesalers and Retailer for All Kinds of Electricals, Electronics and Home Appliances Items.

(CS 481840) (3/6)


# மரண அறிவித்தல்

## திருமதி இராசலிங்கம் இராசலட்சுமி



உடுவில் தெற்கு யாமாச்சந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலிங்கம் இராசலட்சுமி கடந்த (15.12.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அமுதம் தம்பதியினரின் மகளும், செல்லத்துரை - முத்தம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்) அன்பு மனைவியும், சரோஜாதேவி, இரகுநாதன் (ஜேர்மனி), சத்தியதேவி (லண்டன்), குகநாதன் (நோர்வே), சகிலாதேவி (ஆசிரியை - யா / இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், றமணி (ஜேர்மனி), பாஸ்கரன் (லண்டன்), கவிதா (நோர்வே), முருகவேள் (யா / கந்தரோடை தமிழ்க்கலவன் வித்தியாசாலை), ரூபி (நோர்வே), பிரதீபன் (சுவிஸ்), கலாறூபன் (நோர்வே), ஸ்ரீபாஸ்கரன் (நோர்வே), மஞ்சுளம், மைதிலி (கனடா), மலர்விழி (லண்டன்), பகீரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், மிதுனன் (ஜேர்மனி), சாஜனி - துஷ்யந்தன் (லண்டன்), சர்வினி (லண்டன்), அபிநிஷா (நோர்வே), ஆதிபன், ஆருசன், அக்ஷதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவின், கயல் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், செல்வராசா, தம்பித்துரை, இராஜேஸ்வரி, இராசேந்திரம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வேதநாயகி, அபயவரதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகவரதன், கமலாம்பிகை (லண்டன்), காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், விக்கினேஸ்வரி, இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், முரளீதரன் (கனடா), கலைவாணி (கனடா), கலைச்செல்வி, கலைமணி (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 195 7978
077 610 4167
077 945 1413

தகவல்:
குடும்பத்தினர்

பிறப்பு
02.05.1938

இறப்பு
15.12.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுமானங்களை அமைக்க 7 நாள்களில் விரைவு அனுமதி

யாழ்ப்பாணம் , டிசெ.18

காரைநகர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு 7 நாள்களில் விரைவு அனுமதியைப் பெற்றுக்கொடுக்க காரைநகர் பிரதேசசபையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசசபையின் தவிசாளருக்கும் கட்டுமான அனுமதி வழங்க வேண்டிய பொறுப்பான திணைக்களங்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கமைய 7 நாள்களில் விரைவான அனுமதிகளை வழங்கத் திணைக்களங்கள் இணங்கியுள்ளன.

அதற்கமைய காரைநகர் பிரதேச மக்கள் குறித்த கட்டுமானங்களுக்குரிய ஆவணங்களையும் செலவையும் வழங்கினால் ஏழு நாளுக்குள் சபையால் அனுமதி வழங்க முடியும் என தவிசாளர் முன்மொழிந்த நிலையில் சபையின் உறுப்பினர்களால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-125)

## புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகநபருக்கு மறியல்!

மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட செல்வபுரம் கிடாய்பிடித்த குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



செல்வபுரம் கிடாய்பிடித்த குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்படுகின்றனர் என்று நட்டாங்கண்டல் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழு, நான்கு சந்தேகநபர்கள் தப்பிச் சென்ற நிலையில் ஒருவரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தது.

இதன்போது வெளிமாகாண பதிவிலக்கமுடைய கனரக வாகனம் மற்றும் இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் புதையல் தோண்டப் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சம்பவத்தில் கைதான சந்தேகநபர் மாங்குளம்பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பத் தலைவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதையடுத்து சந்தேகநபரையும் சான்றுப் பொருள்களையும் அன்றையதினமே முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, சந்தேகநபரை நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார் என்று நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஏ-14,19)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் நிலங்களை மீட்டுத் தந்தால் நாட்டை எழுச்சி பெறச்செய்வோம்

## வவு. கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 18

கடந்த 70 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உழுந்து செய்கை மேற் கொண்ட நிலங்களை வன இலாகா திணைக்களத்திடமிருந்து மீட்டுத் தந்தால் எதிர்வரும் 3 வருடங்களில் நாட்டை மாற்றியமைக்க வழிவகை செய்வோம்.

இவ்வாறு வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக் களின் சம்மேளனத் தலைவர் செ.சிறிதரன் தெரி வித்தார்.

வவுனியாவில் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று தோற்கடிக்கப்பட்ட நிலையில் விவசாயம் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த நாடு விவசா யத்திலே தங்கியிருக்கின்ற நாடாக இருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அன்று 45 ஆயிரம்ரூபாவுக்குஉழுந்தை வாங்கி இன்று நெல்லை விற்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்த விவசாயி களைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லையா?

ஆயிரத்து 50 ரூபாவுக்கு உழுந்தை வாங்கி விதைத்து விளையும் நேரத்தில் அரசாங்கத்தின் தவறுதலான திட்டமிடல்களால் விலையை மிகக் குறைவாகக் கொண்டு வருகின்றார்கள். எங்களது கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்டு மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் மரக்கறிகள், இடைத்தரகர்களால் தம்புள்ளை சந்தைக்குச் செல் லும் வரை விலை அதிகரித்துக் கொண்டு செல்லப்படு கின்றன. இதனால் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே அடுத்த அறுவடையின் பின்னர் நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லை நல்ல விலைக்கு கொள்முதல் செய்யத் தயாராக வேண்டும்.

அதுமட்டுமின்றி அண்மையில் ஏற்பட்ட குளிர் கார ணமாக அதிக கால்நடைகள் இறந்துள்ளன. மாடுக ளுக்கு சரியான மேய்ச்சல் தரை இல்லை. இதனால் மாடுகளைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டி இருக்கின்றது. மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலை வேறு நிறுவனங்கள் வாங்கிச் செல்கின்றன. இந்த நிலையில் பால் உற்பத்தி மேற்கொள்வதற்கு சரியான மேய்ச்சல் தரவை வேண்டும். அதற்கு எமது பயிர்நிலங்களும் தேவைப்படுகின்றது.

வன இலாகாவினுடைய நிரந்தர காடுகளை. நாங் கள் பயன்படுத்தவில்லை. இந்த நிலையில் ஜனா திபதியிடம் பகிரங்கமான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன். எமது நாட்டை மேலே கொண்டு வருவதற்கு வன இலாகாவைக் கட்டுப்படுத்த வேண் டும். கடந்த 70 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உளுந்து பயிர்ச் செய்கை மேற்கொண்ட இடத்தை தற்போது மீட்டுத் தந்தால் மூன்று வருடங்களில் நாட்டை மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய் வோம் - என்றார். (எ-14.110)

# ஒளிவிழாவும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்.மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் நிறுவ னத்தின் வருடாந்த ஒளிவிழாவும் ஒன்றுகூடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. விழாவில் அனைத்து செவிப்பு லன் வலுவற்றோரையும் கலந்து சிறப்பிக்குமாறு நிறு வனத்தின் தலைவர் கெ.பிரகாஷ் அழைப்பு விடுத் துள்ளார். (எ-14)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V). 1993 ஆண்டு உயரம் 6'.கிரகபாவம் 26 3/4. சித்திரை முதலாம் பாதம். செவ்வாய் இரண்டில் B.SC பட்டதாரி பல்கலைகழக விரிவுரையாருக்கு தகுந்தமணமகளை (வீட்டுடன்) எதிர்பார்க்கின்றனர். தரகர் தேவையில்லை.

(cs.22200) (2.6) தொடர்பு: தந்தை - 071 406 1879

## புத்தக வெளியீடு

### நவதாராளவாத திட்டத்திற்கு எதிரான மாற்று என்ன?

வடக்கில் ஐக்கிய சோலிசக் கட்சியின் பணிகளை பிரபலப்படுத்துதல்.

**டிசம்பர் 20, 2022 (செவ்வாய்), மாலை 3.30 மணிக்கு**
**யாழ்ப்பாண ஊடக மையம்,**
**ராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்**

பேச்சாளர்கள்,
- விரிவுரையாளர் சாமிநாதன் விமல்
- வழக்கறிஞர் எஸ்.தேவராஜா
- சிறிதுங்க ஜயசூரிய

(CS 22244)(3/6)

அமைப்பு: வடக்கு - தெற்கு சகோதரத்துவம்

# சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க பொன் விழா

சாவகச்சேரி, டிசெ.18

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொன் விழா நிகழ்வும் பன்னாட்டு கூட்டுறவு நூற்றாண்டு தின விழா வும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.சுதர்சன் தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பா ணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன், சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செய லாளர் திருமதி த.உமா, தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சு.உஷா, மாவட்ட கூட்டுறவுச் சபையின் செய லாளர் த.ரமேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற 36 அங்கத்தவர்க ளும், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 7 சங்க அங்கத்த வர்களின் பிள்ளைகள் மற் றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 8 மாணவர்களுக்குமான மதிப்பளிப் பும், பொன்விழா மலர் வெளியீடும் இடம்பெறும். (எ-9)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18.08.1940 மறைவு 18.12.2021

### தம்பு அருச்சுனன்

(முன்னாள் பொலிஸ் அதிகாரி – யாழ்ப்பாணம்)

புன்னகை பூத்த மலரொன்று - பூமியில்
விதைக்கப்பட்ட நாள் - இன்று
ஆண்டு ஒன்று கழிந்தாலும் - உங்கள் அருகாமை
நிரப்ப இயலவில்லை - எவராலும்
பப்பா உங்கள் அன்பிற்கு இன்று - அந்த
ஆகாசமே தலை வணங்குகின்றது.
உங்களை விட சாமியும் இல்லை - இன்று
வார்த்தைகள் மௌனமாகவும் சந்தோசங்கள் மரணித்தும்
நிற்கின்றது நீங்கள் இல்லாத இடத்தில் - பப்பா
ஏழு ஜென்மங்கள் போதாது நாங்கள் - உங்களிடம்
பட்ட கடனை அடைக்க - இன்று எங்கள்
கண்ணீர் துளிகள் எல்லாம் பாடுகின்றது - உங்கள் அருமை

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

கரவெட்டி தெற்கு, கரவெட்டி. 077 193 2430

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (பெறாமகன் - குகன்)

(CS 48170) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் அலுவலக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

**அருணன் ரஞ்சன்**

அவர்களின் மறைவினால் துயருற்றி ருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், வரலாற்றுத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்.**

(C22277) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 05 . 1958



மறைவு 15 . 12 . 2022

### சின்னத்தம்பி சிறீதரன்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் தற்போது 1ஆம் வட்டாரம் நேசன் குடியிருப்பு புதுக்குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிறீதரன் கடந்த (15.12.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று. புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குட்டிப்பிள்ளையார் கோவிலடி, நேசன் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**
**077 536 2395**

(cs.48173) (2.6)

தகவல்: **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மடிச்சுக்கட்டியெனும் மற்றொரு ஆபத்து!

வடக்கு மாகாணத்தில் நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது என்று எச்சரித்திருக்கின்றார் வடமாகாணத்தில் விவசாயப் பணிப்பாளர். கிளிநொச்சியில் மடிச்சுக் கட்டியின் தாக்கம் தீவிரமாக அவதானிக்கப்படுகின்றது என்று கிளிநொச்சி விவசாயிகள் வெளிப்படுத்திய ஓரிரு நாள்களில், இந்த 'விவ்சாயப் பேரிடர்' கிளிநொச்சியில் மட்டுமல்லாமல் வடக்கு முழுவதும் ஆட்கொண்டிருக்கின்றது என்றவாறாக அமைந்துள்ளது பதில் பணிப்பாளரின் கருத்து. இதுவிடயத்தில் அதிகாரிகள் தற்போது துரிதமாகச் சிந்தித்து, போர்க்கால அடிப்படையில் செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, அவர் பலமுனை எதிர்ப்புக் களையும் மீறி நடைமுறைப்படுத்திய இரசாயன உரம் மீதான தடை இலங்கையில் மட்டுமல்ல விவசாயிகள் வாழ்விலும் ஆகப்பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. தொடர்ந்துவந்தவறட்சியானகாலநிலை, விவசாயத்துக்குத் தேவையான எரிபொருள் இல்லாமை என்பன காரணமாக நாடெங்கிலுமுள்ள விவசாயிகள் சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொண்டனர், வாழ்வதற்கு வழியற்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். இவற்றையெல்லாம் தாண்டித்தான் இம்முறை பெரும்போகச் செய்கையை அவர்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் மேற்கொண்டனர். மண்ணெண்ணெய்க்காக நீண்டுசென்ற எரிபொருள் வரிசைகள் முதல் கூடுதலான விலைக்கு கிருமி நாசினிகள் மற்றும் உரங்களைப் பெற்றுக்கொண்டமை வரை ஏகப்பட்ட உடலுழைப்பையும் முதலீட்டையும் இந்தப் பெரும்போகத்துக்காக விவசாயிகள் செலவிட்டுள்ளனர். இவ்வாறான நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்வதைப்போன்று மீண்டும் ஒரு பொருண்மியப் பேரிடர் விவசாயிகளை நோக்கி எதிர்முனைக் கத்தியாக நீண்டு நிற்கின்றது.

மடிச்சுக்கட்டி என்பது பயிர்களை உயிருடன் கொல்லும் ஓர் பேராபத்தான நோய் நிலை. இந்த நோய்க்கு பயிர்கள் ஆட்பட்டால் அதன் இலைகள் சுருண்டு – வெளிறிப்போய் பச்சைய இழப்பைப் பயிர்கள் சந்திக்கும். பச்சையம் இல்லாவிட்டால் அது விளைச்சலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நெல்மணிகள் பதர்களாகும் வாய்ப்புக்களையும் அது ஏற்படுத்தும். இது தேசிய நெல்லுற்பத்தியில் (உணவுற்பத்தியில்) கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், மீண்டும் எமது நாடு மியான்மர், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு காரணமாக அமையும்.

இலங்கையின் பொருளாதாரம் சிதிலமடைந்துபோய், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கட்டமைப்பு இன்னமும் முற்றுப்பெறாமல் ஊசலாடிக் கொண்டிருக்கும் (கடன்கள் கிடைத்தாலும் அது சுமையாகத்தான் அமையும்) இந்தக் காலகட்டத்தில், இலங்கையர்களாக நாம் ஆறுதல்படக்கூடிய ஒரே விடயமாக இந்த வருடப் பெரும்போகச்செய்கைதான் அமைந்திருந்தது. இவ்வாறிருக்கையில் அந்த ஒரேயொரு ஆறுதலும் முற்றாக நீர்த்துப்போகும் இந்தப் பேராபத்தான நிலை தொடர்பில் அரசு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மடிச்சுக்கட்டியை எதிர்கொள்வதற்குத் தேவையான கிருமிநாசினிகள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகவும் இப்போதிருக்கின்றது.

விவசாயிகள் பயிரிழப்புக்கான இழப்பீட்டுத் தொகைகளை எக்காலமும் (இயற்கை இடர்கள் தவிர) எதிர்பார்க்கவில்லை. பயிரழிவுகள் ஏற்படாமல் இருக்கக்கூடிய சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தித் தருமாறுதான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். 'கிடைக்கும் இடங்களிலெல்லாம் பயிர்ச்செய்கை' என்று பெரும்போகத்தை ஒரு புரட்சிபோல் முன்னெடுத்த ரணில் அரசாங்கம் இந்த இடர்பாட்டுக்கான தீர்வையும் மிக விரைவாக விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் ஒருவரின் வாழ்வில் விளக்கேற்றினால், அது உங்கள் பாதையையும் பிரகாசமாக்கும்"

- புத்தர்




# பயிரிடப்படாத நிலங்களை அரசுடைமையாக்க தீர்மானம்

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

பயிரிடப்படாத நிலங்களை அரசுடைமையாக்குவதற்கான சட்ட வரைவுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது கொழும்பிலுள்ளவர்கள் தமது சொந்த இடங்களிலுள்ள நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாமல் உள்ளனர். நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கமைய அடுத்தபோகத்தின்போது பயிரிடப்படாத குறிப்பிடத்தக்களவு நிலத்தை அரசுடைமையாக்கி இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

இதற்கென சட்டவரைவுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டில் இதுவரை சுமார் ஒரு லட்சம் ஏக்கர் வயல் நிலங்கள் பயிரிடப்படாதுள்ளன - என்றார். (ச-இ)

# கிங்ஸ்பெரித் தாக்குதல் சந்தேகநபருக்கு பிணை

கொழும்பு, டிசெ. 18

ஈஸ்டர் தாக்குதல் தினத்தன்று கொழும்பு கிங்ஸ்பெரி விருந்தகத்தில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் கைதுசெய்யப்பட்டு 3 வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபரை பிணையில் விடுவிக்க கோட்டை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. குறித்த சந்தேகநபருக்கு பிணை வழங்க ஆட்சேபனையில்லை என சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கமைய இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார். (ச-இ)

நாளை

19.12.2022

திங்கட்கிழமை

மார்கழி 04

சுபநேரம் : 12.23 - 01.53

ராகுகாலம் : 07.53 -09.23

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கண்துடைப்பே சர்வகட்சிக் கூட்டம்!

## வினோநோகராதலிங்கம் எம்.பி. ஆதங்கம்

கொழும்பு, டிசெ. 18

வெளிநாடுகளை கண்துடைப்பு செய்து பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு ஒரே ஆயுதமான பேச்சு எனும் மாயைக்குள் தமிழர் தரப்பை உள்ளீர்த்து இழுத்தடிப்புச் செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முனைந்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய அர்ப்பணிப்பால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் காலத்தில் ஒற்றுமையாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டது.

அதே இலட்சிய வேட்கையுடனும் விடுதலையுணர்வுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று செயற்படுகின்றதா? என்பது தற்போது கேள்விக்குறியே.

தனித்தனியாகப் பிரிந்து சென்று தனக்குத் தனக்காக ஒவ்வொரு கட்சிகளை உருவாக்கிக்கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் செயற்படுகின்றன. இதனால் சிறந்த அரசியல் தலைமை இன்றி தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமைப்படவில்லை என்றால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை. 2002 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்த வேளையில் தமிழர் தரப்பை பேச்சுக்கு அழைத்திருந்தார்.

இதன்போது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம், குள்ளநரித்தனம் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுடன்தான் நாங்கள் பேசப்போகின்றோம் என்று சொன்னார். தற்போதும் சர்வகட்சி என்ற பெயரில் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் பேச்சுக்கு ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ளார்.

எங்கள் அரசியல் உரிமைகளை நிச்சயமாக பேச்சு மூலமாக பெற்றுக்கொள்ளமுடியாது.

அவர் எங்களுடன் பேசவில்லை. பெரும்பான்மையின அனைத்துத் தரப்பையும் அழைத்துவந்து தமிழர் தரப்பை ஓர் அங்கமாக வைத்து பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

நிச்சயமாக இந்தப் பேச்சு வெற்றி பெறப்போவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எதற்காகப் பாடுபட்டார்களோ அர்ப்பணிப்பான உயிரைத் தியாகம் செய்தார்களோ அவற்றை உதாசீனம் செய்து தமிழ் அரசியல் தலைவர்கள் ஒற்றுமைப்படாமல் பிளந்துபோய் நின்றால் தமிழினத்துக்கு என்றுமே விமோசனம் கிடைக்காது.

ஆக, தமிழர் தரப்பு ஜனாதிபதியின் பேச்சு எனும் மாயைக்குள் சிக்காது தமிழருக்கு காத்திரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஒன்றுபட வேண்டும் - என்றார். (ச-19)

# வீடுடைத்துத் திருட்டு நான்கு பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 18

புலோலி சாரையடிப் பகுதியில் வீடுடைத்துத் திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நான்கு பேர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி புலோலி சாரையடிப் பகுதியிலுள்ள வீடொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டன என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களிடமிருந்து தாலிக்கொடி, மோதிரம், தோடு அடங்கலாக 14 பவுண் நகைகள் மீட்கப்பட்டன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,20)

### சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தால்

# யாழ்.போதனாவுக்கு ஒருதொகுதி மருந்துகள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

சர்வதேச மருத்துவ அபிவிருத்தி நிறுவனத்தால் யாழ். போதனா மருத்துவமனைக்கு 19 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் தலைவர் முரளி கடந்த புதன்கிழமை யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தியிடம் யைளித்தார். மேலும் குறித்த நிறுவனத்தின் பங்களிப்பில் யாழ்.போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ச-27)

# காரைநகர் இந்து மயானங்கள் பிரதேசசபை நிதியில் சீரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

காரைநகர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட இரண்டு இந்து மயானங்களின் புனரமைப்புக்கு காரைநகர் பிரதேச சபை மாதாந்த அமர்வில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - சாம்பலோடை இந்து மயானம் மற்றும் ஆலங்கன்று இந்து மயானம் ஆகியவையே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. குறித்த இரு மயானங்களின் பெயர்கள் முற்காலத்தில் பிழையாக பொறிக்கப்பட்டிருந்த நிலையில் அவை திருத்தியமைக்கப்பட்டு புதிதாக நுழைவுப் பகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் ஆலங்கன்று கடற்கரைக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால் மரணச்சடங்குகளின்போது அஸ்தியைக் கரைக்கச் செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இந்தநிலையில் படையினருடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்கமைய குறித்த முகாம் அகற்றப்பட்டு போக்குவரத்தை இலகுவாக்கும் சூழல் மேற்கொள்ளப்படவுள்ளது என தவிசாளர் தெரிவித்தார். (ச-125)

# நாவலர் சைவப்பணியும் நால்வர் ஆலயமும்



திருமதி ஜெ.ஜெகதீஸ்வரன்,
ஆசிரியர்,
யா/வண்ணை நாவலர் மகா வித்தி.

**நாவலரின் 200ஆவது பிறந்த தினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது பிறந்த தினமாகும். 19ஆம் நூற்றாண்டில் ஈழவள நாட்டில் பல சமயத்தலையீடு மேலோங்கி சைவமும் தமிழும் நலிவுற்று அழிவுற்றிருந்த நிலையில், சைவத்தையும் தமிழையும் மேன்மையுறச் செய்ய யாழ்ப்பாணத்து நல்லூரில் நாவலர் பெருமான் அவதரித்தார். 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதினருக்கு அவர் மகனாகப் பிறந்தார்.

சிறுபராயத்திலேயே சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிரம்பப்பெற்றவராக இவர் விளங்கினார். தான் வாழ்ந்த சமகாலத்தில் ஆங்கிலக்கல்வியுடன் சமயக் கல்வியையும் புகுத்தி அதன்மூலம் சைவப்பிள்ளைகள் மற்றும் பெற்றோர் மதம் மாற்றப்படுவதைக் கண்டார். இதைத் தடுக்கவேண்டும் என்று எழுந்த சிந்தனையின் விளைவாக அன்று அவர் விதைத்த முதலாவது வித்தே வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகும்.

1848 ஆம் ஆண்டில் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்துடன் இந்த வித்தியாலயத்தின் மூலம் சைவசமய மாணவர்களுக்கு சுய சமயத்தின் மேன்மையையும் நற்றமிழின் சிறப்பையும் கல்வியினூடாக உணர்த்தினார். அதுமட்டுமன்றி பிரசங்கங்கள் ஊடாகவும் சைவப்பற்றையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். சைவசித்தாந்த கருத்துக்கள், திருமுறைகள், பெரிய புராண வசனம், பாலபாடம், சைவ வினாவிடை இன்னும் இன்னோரன்ன நூல்களை வெளியிட்டு சைவத்துக்குப் புத்துயிர் கொடுத்தார். இவரிடம் கல்விகற்ற பலர் பண்டிதர்களாக விளங்கியதுடன் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியர்களாகவும் தலைமையாசிரியராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாவலர் சமயப்பணியில் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் (யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) நாவலரால் அமைக்கப்பட்ட நால்வர் கோயில் இலங்கையில் மட்டுமன்றி எங்கும் காண முடியாத சிறப்பிற்குரியது. இவ்வாலய மூலஸ்தானம் சமய குரவர் நால்வரைக் கொண்டதுடன் பெரிய புராணம் எனும் நூல் மூலம் நால்வரையும் ஏனைய நாயன்மாரையும் உலகுக்கு வெளிப்படுத்திய சேக்கிழார் பெருமானும் அர்த்தமண்டபத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். பிறசமயத்தின் ஆளுகைக்குள்ளிருந்து சைவமக்களை மீட்கவும் திருமுறைகள், திருவாசகம் ஓதுதல், நாயன்மார் குருபூசை தினங்களில் இவ்வாலயத்தில் பிரசங்கங்கள், சொற்பொழிவுகளை நிகழ்த்துதல் மூலமும் மக்களிடத்தில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 'ஐந்தாம் குரவர்' எனவும் 'அறுபத்து நான்காம் நாயனார்' எனவும் சிறப்பிக்கப்படும் நாவலரால் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் கடந்த 24 ஆண்டுகளாக (1998 ஆம் ஆண்டின் பின்) குடமுழுக்கு செய்யப்படாது தடைப்பட்டு வந்த நிலையில் தற்போது கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது.

நால்வர் வழியில் சைவத்தை வளர்த்த நாவலரது இருநூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் இவ்வேளையில் அவர் வழியில் பயணப்பட முயற்சிப்பதே நாம் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்யும் அரும்பெரும் உதவியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 18.11.2022 (வெள்ளிக்கிழமை) சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திலகமணி தவமணிநாயகம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (18.12.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனைகள் எதிர்வரும் (20.12.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**உதயதாரகை,**
**கோணப்புலம் வீதி, மல்லாகம்.**

**குடும்பத்தினர்**

(CS 48168 ) (3/6)

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தையா யோகம்மா

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா யோகம்மா அவர்கள் கடந்த (16.12.2022) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் யாழ்.தொழில்நுட்ப கல்லூரி போதனா ஆசிரியர், கலாபூசணம் வல்லிபுரம் கந்தையா (மணியம் மாஸ்ரர்) அவர்களின் அன்புத் துணைவியும், அமரர்களான சின்னத்தம்பி சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், அமரர்களான வல்லிபுரம் இலட்சுமி தம்பதியரின் மருமகளும், அமரர்களான தம்பித்துரை, சற்குணவதி மற்றும் வரதராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர்களான தம்பிப்பிள்ளை, பரமசாமி, அன்னலட்சுமி , தர்மலிங்கம், நடராசா, கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும், அமரர்களான தவராசா, பவாணி மற்றும் சறோசா, சிவராஜா, யோகராணி, சாந்தினி, திரிலோசினி, ஆனந்தராஜா, அருளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி, கந்தசாமி, லோகநாதன், புஸ்பா, லோகரட்ணம், குணபாலசிங்கம், சூரியகுமார், சுபதா, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தன்-பிருந்தாமலர், கௌரி - ஜனார்த்தனன், பிருந்தா - உமாசெல்வன், காயத்திரி - அகிலன், கார்த்திகா - மயூரன், மயூரன், சகதிபிரசாத், வேணுகா, ஆர்த்திகா, கிரிசன், பகீரதி- கிஷ்ணகுமார், இந்துஜா, முகுந்தன், சுமங்கலியா- பிரசன்னா, சகனா, ராகவி, ரங்கவி, சாமினி, அபிநயா, ஆரணா, தருனிகா, நர்த்தனன், கிரிஷாந், கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஶ்ரீஹரி, ஹனுஸ்ஹரி, அபிராமி, மீனாட்சி, மாயா, கனிஸ்ஹா, கவிநயா, டர்னிதா, அட்சரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 38793) 1/6

# மரண அறிவித்தல்



## முருகேசு தனபாலசிங்கம் (பாலன்)

மேலைக்கரம்பொன் ஐத்தாம்புலத்தைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, நல்லூர் கலைமகள் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும், மண்கும்பானில் வசித்தவரும், தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தனபால சிங்கம் கடந்த (13.12.2022) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு (சின்னத்தம்பி) (நீதிமன்றம்-ஊர்காவற்றுறை) மீனாட்சி தம்பதியினரின் ஏக புதல்வனும், மண்கும்பானைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத் துரை - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், சரோஜினி தேவியின் அன்புக் கணவரும், நிவேதிகா, மலரவன், தனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜினிதேவி, லக்சுமிதேவி (ஜேர்மனி), பத்மாதேவி, ரஞ்சினிதேவி (ஜேர்மனி), அம்பிகாதேவி, ஜெகதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிருஸ்ணதாஸ், ரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன், அருமைநாயகம் (ஜேர்மனி), பற்குணராஜா, பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.12.2022) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்.**

**பிறப்பு 10.03.1951**

**இறப்பு 13.12.2022**

**தகவல் :**
**திருமதி அம்பிகாதேவி பற்குணராஜா**
**யாழ்ப்பாணம்.**

(CS 22273) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V)U.K, 37 வயது, உயர்கல்வி சைவ போசனம் உடையவருக்கு பண்பான மணமகள் தேவை.
தரகர் தேவையில்லை. (cs48119) (2.6)

**070 697 9388**

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபைகுட்பட்ட பிரதேசத்தில் கே.கே.எஸ் மற்றும் பிறவுண் வீதி அருகாமையில் 2 ஆம் மாடி, 3 ஆம் மாடி வீடுகள் வாடகைக்கு கொடுக்கப்படும். (cs48121) (2.6)

**071 794 3362, 071 514 2706**

## கடை வாடகைக்கு

மணிக்கூட்டு வீதி. பெருமாள் கோயிலடியில் 1ஆம் மாடிக்கடை 70 அடி நீளம் 25 அடி அகலம் விஸ்தீரணம் உடைய கடை வாடகைக்குண்டு. (CS 22142)(3/6)

**தொடர்பு : 077 870 4738**

## இயக்கச்சி காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் A9 Road இல் 8 1/2 ஏக்கர் உறுதி காணி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். (CR 38783) (3/6)

**T.P : 0044 7361171645 (What's App only)**


## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

# றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான "றோயல் நெய்" கொண்டு
தயாரித்த அறுசுவை உணவுகளுடன்
கொண்டாடி மகிழுங்கள்

Packed By:-
**Royal Industries®**
Marketed By:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567




குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## இந்தியத்துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்

# காணி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்திய துணைத் தூதரகத்திற்கான அலுவலக கட்டடத்தை அமைப்பதற்காக மற்றும் உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்பு களை நிர்மாணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் பொருத்தமான காணியை எதிர் பார்க்கின்றது. காணிக்கான குறைந்த பட்ச நில அளவானது 1 ஏக்கர் (16 பரப்பு 160 பேர்ச்) ஆகும். காணியானது பிரதான சாலையில் முகப்பை கொண்டதாக இருக்க வேண்டும் மற்றும் காணி தொடர்பில் எந்த விதமான பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் அற்ற தனிப்பட்ட சொத்தாக இருக்க வேண்டும். ஆர்வ முள்ள தரப்பினர் அல்லது தனிநபர் தங்கள் முன்மொழிவை காணி தொடர்பான முழு விபரங்களுடன் எதிர்பார்க்கும் விலையுடன் பின்வரும் முகவரிக்கு பாது காப்பாக மூடப்பட்ட உறையில் அனுப்பவும்.

**தலைமை நிர்வாக அதிகாரி**
**இந்தியத்துணைத் தூதரகம்**
**இல. 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கம் : + 94 21 222 0504 & 222 0505**
**மின்னஞ்சல் முகவரி : hoc.jaffna@mea.gov.in**
(IN 18418)(3/6)


BEVERLEY INTERNATIONAL

# Study in

## UK / Canada / Sweden / Finland / Hungary / Romania

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSWP
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- இலகு கல்விக் கட்டணம்
- வங்கிப்பண வைப்பிற்கான வழிகாட்டல் (Financial Sponsorship)



உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

**0777 284 029**
**021 22 10 277**

## Beverley International

Jaffna Office : No. 401, Clock Tower Road, Jaffna.

Head Office -
No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel: 0112 576 656


## பாலை மரங்கள் விற்பனைக்கு

வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர் ஆலயத்தில் பாலை ஊசிக்கால் மரங்கள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் : செவ்வாய் (20) , புதன் (21) வியாழன் (22) பிற்பகல் 3.00 மணிக்குப் பின்னர். (CS22257)(3/6)

**077 601 6297, 077 724 0701**

## வீடு வாடகைக்கு

யாழ். மருந்துவ பீடத்திற்கு அண்மையிலுள்ள கஜன் திருமண மண்டபத்திற்கு. அருகில் உள்ள வீடு வாடகைக்கு உள்ளது. (CS 22272) (3/6)

**தொடர்பு :077 610 9910**

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில் 1150 சதுர அடிகொண்ட 3 படுக்கை அறை கொண்ட Apartment உடனடி விற்பனைக்கு உண்டு.
(CR 38782) (3/6)

**T.P : 076 058 9822**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கருகில் 2 பரப்பு காணி விற்பனைக்கு மற்றும் கல்வியங்காடு சந்திக்கு அருகில் வீடு விற்பனைக்கு உண்டு. வெளிநாடு செல்ல இருப்பதால் உடனடி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். (CR 38783) (3/6)

**T.P : 0044 7361171645 (What's App only)**

## காணி விற்பனைக்கு

STANLEY வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அரை (1/2) பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை. (CS 48077)(3/6)

**தொடர்பு: 077 645 2487**

## மணமகன் தேவை

1994, யாழிந்து, உத்தரம், Senior Software Quality Engineer, வல்வெட்டித்துறை மணமகள் பதிவு இல : 8606, பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை.

www.EQMarriageservice.com
Ensured Quality Lanka Pvt Ltd.
Colombo - 04
**அழையுங்கள் : 076 664 9401** (CR 38791)(3/6)

## மணமகன் தேவை

1975, யாழிந்து, பூசம் Teacher, யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல : 8594, பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை.

www.EQMarriageservice.com
Ensured Quality Lanka Pvt Ltd.
Colombo - 04
**அழையுங்கள் : 076 664 9401** (CR 38790)(3/6)

## மணமகள் தேவை

1989, யாழிந்து, மூலம், Doctor, பருத்தித் துறை மணமகன் பதிவு இல : 8557, பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை.

www.EQMarriageservice.com
Ensured Quality Lanka Pvt Ltd.
Colombo - 04
**அழையுங்கள் : 076 664 9401** (CR 38789)(3/6)

## காணி விற்பனைக்கு

களுபோவில வைத்தியசாலை வீதியினை முகப்பாகக் கொண்ட 9.5 P காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (CS22257)(3/6)

**077 427 1404**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தாரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
பலாலி வீதி ... பிள்ளையார் கோவில் வீதி, ... பாடசாலை அருகில்
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் ஒரு சிறிய குடும்பத்திற்கு ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு. (தரகர்கள் வேண்டாம்) (CR 38787)(3/6)

**076 66 84919**

## விற்பனைக்கு

ஏழு அடி அகலமுள்ள Double இரும்புக்கேற் விற்பனைக்கு

**071 838 1119, 021 225 5652**

## வீட்டுப் பணிப்பெண்தேவை

வயோதிபப் பெண்ணொருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
(CS 22211) (3/6)

**T.P :077 069 8105**

## கடை தேவை

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் பிரதான வீதியில் கடை ஒன்று வாடகைக்கு தேவை. (NE 21534) (3/6)

**தொடர்பு :075 728 6145**

## விற்பனைக்கு

Freezer Truck விற்பனைக்கு உண்டு. (Cooker) ISUZU.

**077 522 8547**

## வாகனம் விற்பனைக்கு உண்டு

Model - 2015 LO-XXXX ISUZU Freezer Cooler விற்பனைக்கு.
PQ-XXXX Dimo Bata விற்பனைக்கு.

**077 5732 563**

## வீடு காணிகள் விற்பனைக்கு உண்டு

கோப்பாய் இராச வீதிக்கு அண்மையில் 2 1/2 பரப்புக் காணியுடன் புதிய வீடும், இருபாலை சந்திக்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கும் இடையில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 1933 490**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் குடும்பம் ஒன்றிக்கு வீடு வாடகைக்கு உண்டு. அத்துடன் மாணவ, மாணவிகளுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு.
கடையும், களஞ்சிய சாலையும்.
நாளாந்த, வாராந்த சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடமும் நவீன வசதிகளுடன் உள்ளது.

**077 34 500 39**

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 255 0807**

## ஆரம்ப கால திருமண சேவை

கனடா மணமகன் (P.R) உள்ளது
அவுஸ்திரேலியா மணமகன் (P.R) உள்ளது
லண்டன் மணமகன் (P.R) உள்ளது
பிரான்ஸ் மணமகன் (P.R) உள்ளது
ஜேர்மனி மணமகன் (P.R) உள்ளது
உள்நாட்டு குறிப்புகள் உள்ளன.

**திருமணச் சேவைக்கு பணிப்பெண் (வேலையாள்) சுன்னாகம், மாவிட்டபுரத்திற்குட்பட்டது.**

**076 704 2986** (CS 48174)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லம்மா அருணாசலம்



தோற்றம்: 26.04.1932 மறைவு: 17.12.2022

மீசாலை மேற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் செல்லம்மா நேற்று (17.12.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னர் தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னர் அருணாசலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, லட்சுமிப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வசந்தகோகிலம், இந்திராணி, சந்திராதேவி, சரஸ்வதி, விமலாதேவி (லண்டன்), கமலாதேவி (முன்னாள் ஆசிரியர், வீரசிங்கம் மத்திய கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வி.), ரேணுகாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராசா, முருகதாஸ், இரத்தினசிங்கம், சிவபாதம், சிவப்பிரகாசம், அருளானந்தம், இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், அமரர் விஜயகுமார், விஜயரூபி குமாரசாமி, விஜயரூபன் நந்தினி (லண்டன்), துருபதராஜன் (மதன்) கீதா (அவுஸ்திரேலியா), மாதினி சிவகுமார் (கனடா), ஆரூரன் இந்திரவதனி (அவுஸ்திரேலியா), அனந்தினி சயந்தன் (கனடா) திருச்செந்தூரன் தேவகி, நிவேதினி லோஜிதன் (கனடா), சுபோஜினி பத்மகாந்தன் (லண்டன்), சியாமினி கிருஸ்ணராசா, சுயந்தன் நிஷாந்தா (பிரான்ஸ்), பிறிஜியா புவனசுந்தரன் (கனடா), நிருஜியா, உதயகுமார், அனுஜியா சுதாகர் (கனடா), சர்மிலன் பவிற்றா (லண்டன்), சகிலன் துஷானி (லண்டன்), கேமசொரூபி வசந், மனோசஜி துஜீவ், ஜெகத்ஜனன் சஜித்தா, நிருஸ்தனா, அம்ஷாயினி (லண்டன்), டியானி (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், யோகசிறி திலக்ஷனா, தீபிகா துஷாந், மிதுஷா, தாரிகா, திவ்யா, துவாரகா, துஷாந், மாதுர்யா, ரம்யன், பவ்ஜயன், ஆக்னா, ஆயுஷ்மன், ஆக்சுமனன், கோத்தீஸ்வர், பவசுவேத்தாரணி, ஆதேஷ், ஆத்யா, அனீஷ், சங்கமி, ஜனாத், கிஷாந், கேனுயன், பவிஷ்கா, மிரேஷ், ஆரீஷ், பிரணவி, பிரணவன், பிரவீன், அபிஷா, அபிஷன், சுஜேன், அகீஷ், அய்ரா, ஜியா, ஆரவி, தண்ணெழிலி, பூங்கவினி, பிரஜித், தஸ்விகா, ஜியானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 7017 365**
**077 021 2455**

(CS 22276)1-6

# மரண அறிவித்தல்



## நவரெத்தினம் கண்ணம்மா

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் கண்ணம்மா அவர்கள் (16.12.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நவரெத்தினம் (முன்னாள் வர்த்தகர், நவரெட்ணம் ஸ்ரோர்ஸ் மாவத்தகம - குருநாகல்) அவர்களின் பாசமிகு மனைவியும், நித்தியகலா (கனடா), சாந்தகலா (கனடா), சாந்தகுமார் (பிரபல வர்த்தகர் N.S. றேடர்ஸ் மாவத்தகம - குருநாகல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலைச்செல்வன் (கனடா), துரைராஜசிங்கம் (கனடா), யசோதினி (துபாலதிபர், பிரதி அஞ்சல்மா அதிபதி அலுவலகம், யாழ்ப்பாணம், பிரதேச சபை உறுப்பினர் -வேலணை) ஆகியோரின் பாசமிகு மாமியும், அஸ்வினி, மதுஷா, விபிதா, விதுஷா, கிஷான், கஸ்வினி, தஷானிக்கா ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தேவராஜா, மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு அண்ணியும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு சகலியும், மைதிலி (பிரதி அதிபர், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வாகீசன் (ஐக்கிய அமெரிக்க தூதுவராலயம்-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், புவலோஜினி (UK) சிவலோஜினி (அநுராதபுரம்), செந்தூர்வாசன் (UK), சத்யலோஜினி (UK) ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்**
**13.04.1944**

**மறைவு**
**16.12.2022**

இல.31, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(CS 48156) (3/6)

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 152 0598, 077 937 3015**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பாதுகாப்புக்கு ஆலோசனைகள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு "வடக்கு மாகாணத்தில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி" எனும் கருப்பொருளில் எதிர்கால கொள்கை வகுத்தலுக்கும் திட்டமிடலுக்கும் மாகாண அபிவிருத்தியை நிலைநாட்டுவதற்குமான பெறுமதியான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அனுபவசார், அறிவுசார் சமூகத்திடமிருந்து கோரியுள்ளது.

அத்துடன் தங்களால் அடையாளப்படுத்தப்படும் பிரச்சினைகளும் அவற்றுக்கான ஆக்கபூர்வமான நடைமுறைப்படுத்தக் கூடிய தீர்வுகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் பற்றிய தகவல்களை மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04, புளூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது அமைச்சின் womendatanp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாண மகளிர் விவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-14)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி நிரஞ்சலா ஜெகசோதி

தோற்றம் 04.11.1970 மறைவு 18.12.2016

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஆறல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது.

குடும்பத்தினர்
இல. 40, சுவர்ணா வீதி, கொழும்பு - 06

(ACO In 16537) (3/6)

## 23ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 16 . 11 . 1940 மறைவு 26 . 11 . 2022



வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் பொன்னம்பலம் கந்தையா

(வீடமைப்பு திணைக்கள இளைப்பாறிய ஆணையாளர்)

அவர்கள் கடந்த 26.11.2022 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார். எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தோர், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக எமக்கு ஆறுதல் தெரிவித்தோர்க்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் அனைவரின் சார்பிலும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியை இன்று (18.12.2022) ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி : நேசம் (பத்மாதேவி)
பிள்ளைகள் : காண்பன், பவளாஞ்சலி (ஏஞ்சல்) தேவாஞ்சலி (பேபி)
மருமகன் : வரதீஸ்வரன்
மற்றும் பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.
புத்தூர் வீதி, மீசாலை வடக்கு, மீசாலை.

(CS 480127) (3/6)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14.01.1946 உதிர்வு 09.01.2021



அமரர் தர்மலிங்கம் திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை அதிபர்)

திதி : அபரபக்க மார்கழி மாத ஏகாதசி (18.12.2022)

இரண்டு ஆண்டுகள் கடந்தும்
அப்பா உங்கள் நினைவுகள்
எம் இதயங்களில் இன்னும்
இமயமாய் கனதியுடன் ....!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
2ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, [illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 02 . 1931 மறைவு 23 . 12 . 2021



அமரர் பொன்னையா கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

எம்மை விட்டுப்பிரிந்து
ஓராண்டு ஆகியும் எங்கள்
உள்ளத்தில் குடியிருக்கும் எங்கள்
அன்புத் தெய்வமான உங்களுக்கு
எமது அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

28A, மக்கெய்சர் வீதி, [illegible]மலை, திருகோணமலை.

குடும்பத்தினர்
திருமதி இரத்தினமாலா குமாரதேவன் (மகள்)
077 949 2908

(CS 48094) (3/6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# ஆமடில்லா பிடித்தவர் கைது



முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் காடுகளில் வாழும் ஆமடில்லா (அழுங்கு) என்றழைக்கப்படும் விலங்கை இறைச்சிக்காகப் பிடித்துச் சென்றவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் தேராங்கண்டல் பகுதியிலுள்ளவீடொன்றில்ஆமடில்லாவிலங்கை இறைச்சிக்குப் பயன்படுத்தவிருந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தால் விலங்கு உயிருடன் மீட்கப்பட்டதுடன் விலங்கைக் கொண்டு செல்ல முற்பட்டவரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் விலங்கையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (எ-14.19)

## கால்பந்தாட்ட உலகக்கிண்ணம்

# பிரான்ஸ் - ஆர்ஜென்ரீனா கிண்ணத்துக்காக மோதல்

கட்டார், டிசெ. 18

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறுகின்றது. இன்றைய ஆட்டத்தில் பிரான்ஸ் மற்றும் ஆர்ஜென்ரீனா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்தில் மொரோக்கோவையும், ஆர்ஜென்ரீனா அணி அரையிறுதி ஆட்டத்தில் குரோசியாவையும் வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. (ம)

# கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் குரோசியாவுக்கு மூன்றாமிடம்!

கட்டார், டிசெ. 18

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்று மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது குரோசியா.

மூன்றாம் இடத்துக்கான இந்த ஆட்டத்தில் குரோசியாவை எதிர்த்து மொராக்கோ மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் குரோசியா வெற்றி பெற்றது. (ம)



கைதடி குருசாமி வித்தியாலய மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளில் உளவியல் தொடர்பான செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வளவாளராக உளநல மருத்துவர் இ.சிவசங்கர் கலந்து கொண்டார். (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் மலிவு விற்பனை

ஏசியன் தளபாட நிலையத்தில்
**இன்று முதல் மாபெரும் மலிவு விற்பனை.**
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம்)
**077 358 3879, 076 821 9416** (CS 22289)(1-6)



## வேலைக்கு ஆள்தேவை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
சிற்றுண்டிச் சாலைக்கு (மந்திகை)
வேலையாட்கள் தேவை.

1). சமையல் - ஆண் / பெண்
2). றொட்டி வேலை - ஆண்
3). துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் - ஆண்
4). போட்டோகொப்பி - பெண்
5). உணவு பரிமாறுபவர் - ஆண்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(தங்குமிட வசதி உண்டு).

**தொடர்புகளுக்கு :**
**077 379 2288**
(ஒப்பந்தகாரர்)


# மடிக்கணினி திருட்டு!

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் சகாயபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மடிக்கணினி திருடப்பட்டுள்ளது என்று இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வீட்டின் உரிமையாளரால் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,125,27)


## விற்பனைக்கு

யாழ். நல்லூர் கோயிலுக்கு முன்பாக 3 பரப்பில் அமைந்த புதிய வீடும். யாழ் அடைக்கலமாதா கோயிலுக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த வீடும். யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு அண்மையில் 6 1/2 பரப்புக் காணியும். யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ரட்ணம் பாமசிக்கு அருகில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **0777 23 25 35** (CS 22288)1-6



# தண்டவாளத்தில் ஒளிப்படம்: ரயில் மோதி மூவர் இறப்பு!

கொழும்பு, டிசெ. 18
தண்டவாளத்தில் ஒளிப்படம் எடுத்த மூவர் ரயில் மோதியதில் உயிரிழந்தனர். இந்த விபத்து தெஹிவளையில் நேற்று இடம்பெற்றது.
தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையைப் பார்வையிடுவதற்காக மாத்தறையில் இருந்து சென்ற மூவரே இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு முருகேசபிள்ளை

**தோற்றம் : 20.10.1945** **மறைவு : 17.12.2022**



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் முழங்காவில் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு முருகேசபிள்ளை நேற்று (17.12.2022) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, கனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், நாகராஜன், யசோதா, முரளிதரன், விநாயகரூபன், ரஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினோதினி, யோகநாயகம், சிறிப்பிரியா, சகுந்தலாதேவி துசியந்தினி ஆகியோரின் மாமனாரும், கார்த்திகன், திகழவன், நிலோயன், அனுஸ்கா, கேயிதா, பிரணிகா, கபிஸ்னா, வருணிகா,கபினயா, தியாரா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பவா வீதி, முழங்காவில்.**
**தகவல்: குடும்பத்தினர்.**
(CR 38795)1-6

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 11 . 1957
இறப்பு 17 . 12 . 2022

### திருமதி தம்பிஜயா தங்கரத்தினம்

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கரத்தினம் தம்பிஜயா அவர்கள் நேற்று (17.12.2022) சனிக்கிழமை காலமானார்.
அன்னார், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தம்பிஜயா அவர்களின் அன்பு மனைவியும், சிவகாந்தராஜா (லண்டன்), சிவானந்தராஜா (லண்டன்), சிவநிதி, சிவரஞ்சினி, சிவரூபன் (லண்டன்), காலஞ்சென்ற சிவர்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகந்தினி (லண்டன்), ராதிகா (லண்டன்), சத்தியசீலன், சத்திகுமார், மாதுளா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, பொன்னு, இராசதுரை, இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, ஆறுமுகம், தங்கமுத்து, யோகச்சந்திரா, தங்கராசா, தங்கமுத்து, சின்னையா, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனியும், கவினாஷ், அபிசன், சன்சயா, சதுயா, பாணுசா, கபிஷன், கிஷான், ஆருசா, சஜித்தன், யஷ்வின், ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் பலாலி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பலாலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
0779283985
0771475254
0779396659


**பலாலி கிழக்கு, பலாலி.**
(CR 38793) 1/6

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை அன்ரனி ஜசிந்தன் (ஆசை)

(ஆசிரியர், யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்)

**பிறப்பு : 07.08.1989** **இறப்பு: 16.12.2022**



சேவில் ஒழுங்கை தும்பளை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அன்ரனி ஜசிந்தன் (ஆசை) (ஆசிரியர், யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்) அவர்கள் கடந்த (16.12.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அமரர் ஜோர்ஜ் அந்தோனிப்பிள்ளை அமரர் அந்தோணிப்பிள்ளை ஜெயபாரதிதேவி தம்பதியரின் அன்பு மகனும், பி.ஜசிக்கா (ஆசிரியை, யா/நெல்லியடி மத்திய கல்லூரி), அன்ரனி ஜசிந்தா (Acting Consultant, Pediatricion, Maancholai (UK)), அன்ரனி ஜோன்சன் (Senior Executive Operations, Vaanavil) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சு.பிரகலாதன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு மைத்துனரும், அத்மிகன், அகரன், ஆதிரன் ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 2208 245**
**077 1538 895**
**077 7579 949**
(CS 19936)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் ரஷ்யா நேற்று தீவிர ரொக்கெட் தாக்குதல்

**கீவ், டிசெ. 18**

**உக்ரைனின் தலைநகர் கீவ் மற்றும் வர்த்தக நகரான கார்கீவ் ஆகியவற்றைக் குறிவைத்து ரஷ்யா நேற்று மூர்க்கத்தாக்குதல் நடத்தியுள்ளது. ரஷ்யா தனது படைகளைத் திரும்பப்பெற்ற இடங்களிலேயே நூற்றுக்கணக்கான ஏவுகணைகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**



நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முன்னெடுப்புக்களை மேற்கொண்ட நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது போர் அறிவிப்புச் செய்தது ரஷ்யா. கடந்த 10 மாதங்களாக இந்தப் போர் இடம்பெற்று வருகின்றது. கார்கீவ் உள்ளிட்ட சில நகரங்கள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட நிலையில் இந்த நகரங்களில் இருந்து அண்மையில் தனது துருப்புக்களை விலக்கிக்கொண்டது ரஷ்யா. போரில் ரஷ்யா பின்வாங்குகின்றது என்றும் குளிர்காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதைக் கருத்திற்கொண்டு ரஷ்யா செயற்படுகின்றது என்றும் விமர்சிக்கப்பட்ட நிலையில், துருப்புக்களைத் திரும்பப்பெற்ற இடங்களில் பலநூறு ஏவுகணைகளால் நேற்று ரஷ்யா மூர்க்கத் தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரைனின் தலைநகர் கீவ், வர்த்தக நகரான கார்கீவ் ஆகிய நகரங்கள் மீதே அதியுச்சத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (அ-ம)

## இனப்பிரச்சினைக்கு...

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனை, இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் நேற்றுச் சந்தித்துப் பேசினார். இதன்போதே எரிக் சொல்ஹெய்மிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் மனோ கணேசன்.

மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

'வரலாற்றில் எல்லோரும் தவறிழைத்துள்ளோம். கடைசி சமாதான முயற்சி தோற்றது. இதற்குச் சில தரப்புகளோ, அனைத்துத் தரப்புகளுமோ காரணம். அதுபற்றி ஆராய்ச்சி செய்யும் தருணம் இதுவல்ல. அது எனது வேலையும் அல்ல. இப்போது நாம் வரலாற்றில் இருந்து பாடம் படித்துள்ளோம். ஆகவே, முன்னோக்கி நகர எமக்கு உதவுங்கள். எரிக்சொல் ஹெய்ம் இலங்கையில் மிகவும் அறியப்பட்ட ஒரு வெளிநாட்டுக்காரர். அவரது தொடர்புகளையும், அனுபவத்தையும் பயன்படுத்த இதுதான் சந்தர்ப்பம்.

பிரிபடாத இலங்கைக்குள் நிரந்தரத் தீர்வை அடைய எமக்கு உதவுங்கள். உங்கள் நண்பர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இதை எடுத்துக் கூறுங்கள். இவ்வாறு நீங்கள் செயற்பட்டு இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்.

இலங்கையின் சமூகப் பரப்பில் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சிப் போக்கை நீங்கள் கவனிக்கவேண்டும். கடந்த காலங்களைவிட இன்று இந்திய வம்சாவளி மலையக மக்கள் ஓர் இனமாக வளர்ச்சி அடைந்துள்ளார்கள். அவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர் மட்டுமே. அவர்களது பிரச்சினை பெருந்தோட்டப் பிரச்சினைகள் மட்டுமே என்ற காலம் மாறி விட்டது.

இன்றைய இனப்பிரச்சினைத் தீர்வில் அவர்களுக்கும் சமபங்கு வேண்டும். வடக்கு - கிழக்கு சகோதர உடன்பிறப்புகள், முஸ்லிம் உடன்பிறப்புகள் மற்றும் சிங்கள உடன்பிறப்புகளுடன் நாம் சமமாக வாழ விரும்புகின்றோம் - என்றார். (அ-ம-22)

## கிருமித்தொற்றால்...

சாவகச்சேரி - நுணாவில் மத்தியைச் சேர்ந்த குகதர்சன் திசான் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன் கிழமை என இரு தினங்களாக குறித்த குழந்தை வயிற்றோட்டம் காரணமாக மூச்சுவிட சிரமப்பட்டுள்ளது. இதையடுத்து கடந்த வியாழக்கிழமை குழந்தை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் குழந்தை நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்துள்ளது.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-20)

## பாணின்...

பாணின் விலையை 10 ரூபாவால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-ம)

## வியட்நாமில்...

இலங்கைக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டது. நீர்கொழும்பு மருத்துவமனையில் முன்னெடுக்கப் பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், 300 க்கும் மேற்பட்ட இலங்கையர்களுடன் கனடா நோக்கிச் சென்ற கப்பல் வியட்நாம் கடற்பரப்பில் சேதமடைந்ததை அடுத்து குறித்த நபர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வியட்நாமில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முனைந்தனர். இவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்ட போதிலும் மற்றைய நபர் உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவரின் சடலமே நேற்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. (அ-ம-27)

## காரைக்கால்...

யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தைப்பொங்கலின் பின்னர் பெப்ரவரி முற்பகுதியில் காரைக்கால் - காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கிறோம். இரண்டு நிறுவனங்கள் இதை ஆரம்பிக்கின்றன. எம்முடனும் கலந்துரையாடல் நடத்துகிறார்கள். இது வர்த்தக கப்பல் சேவை. சிறிய கப்பல்கள்தான் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் - என்றார். (அ-ம-27)

## மியான்மர்...

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுமார் 140 அகதிகளுடன் நேற்றையதினம் கப்பலொன்று கரையொதுங்கியுள்ளது என்று கடற்படை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் தத்தளித்த நிலையில் இந்தக் கப்பல் அவதானிக்கப்பட்டு, கடற்படையின் கப்பல்கள் அனுப்பப்பட்டு குறித்த கப்பல் கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது.

குறித்த கப்பலில் இருந்தவர்கள் புகலிடத் தஞ்சம்கோரி அவுஸ்திரேலியாவுக்கு அல்லது கனடாவுக்குச் செல்ல முயன்றிருக்கலாம் என்றும், செல்லும் வழியில் அவர்களின் கப்பல் பழுதடைந்திருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மியான்மரைச் சேர்ந்த அகதிகளே இவ்வாறு கப்பலில் உள்ளனர் என்று முதல்கட்டத் தகவல்கள் வெளியான போதிலும் அவர்கள் எந்த நாட்டவர்கள் என்பது தொடர்பில் உத்தியோகபூர்வத் தகவல்கள் வெளியாகவில்லை. (அ-ம-26-27-125)

## கல்வித்...

வர் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவில் 2 லட்சத்து 98 ஆயிரம் ரூபா வரையில் நிதி மோசடி செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி உடனடியாக நிர்வாகக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துவதற்காக 5 பேர் கொண்ட விசாரணைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வடமாகாண கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் போக்குவரத்து மேலதிகக் கொடுப்பனவை அவர்கள் கோருகின்ற கொடுப்பனவின் அடிப்படையில் வழங்குவதாகக் காண்பித்துவிட்டு, வங்கியில் வைப்பிலிடச் செல்லும் தருணத்தில் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவில் இருந்து சிறுசிறு தொகைகளை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் குறித்த அதிகாரி வைப்பிலிட்டு வந்துள்ளார். இந்த விடயம் கண்டறியப்பட்ட பின்னர் நேற்றையதினம் இது தொடர்பில் விசாரிக்க தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் 2020ஆம் ஆண்டிலிருந்து குறித்த பிரிவில் கடமையாற்றி வரும் நிலையில் கடந்த காலங்களிலும் இதுபோன்ற மோசடிகள் இடம்பெற்றனவா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள் (Receptionist)
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (Marketing Executive)

ஆர்வமுள்ளவர்கள் நாளை (19.12.2022) திங்கட் கிழமை முற்பகல் 10.00- பிற்பகல் 02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் தங்கியிருந்து 3 மாத குழந்தையை பார்ப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் நல் ஒழுக்கம் உள்ள பணிப்பெண் தேவை.

077 308 3007

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல புடைவை அகத்திற்கு வேலையாள்கள் தேவை. கணினி அறிவுள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 260 4233

## அவசரத் தேவை

சிறுநீரகம் தேவைப்படுகின்றது B அல்லது O இரத்த வகையை உடையவர்கள் தொடர்பு கொள்ளவும் (50 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் )

(CR 38731) (3/6) T.P :077 766 5541

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- சாரதி (Driver)
- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் நாளை (19.12.2022) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 135 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம்

077 98 65 457
077 81 47 389

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஓமினி (OMINI) வான் விற்பனைக்குண்டு.

077 634 1283 (CS 48181) (2/6)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 077 6011135

## வீடு வாடகைக்கு

ஓட்டுமடச்சந்தி அருகில் 6 bedroom, 3 boothroom உள்ள 3 பரப்பிலமைந்த வீடு வாடகைக்கு உண்டு. (CS 22261) (3/6)

தொடர்பு :077 434 1393

## மருந்தாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள Need Pharmacist மருந்தகத்தி-ற்கு மருந்தாளர் தேவை. அத்துடன் அனு பவம் உள்ள மருந்தக உதவியாளர் தேவை.

குறிப்பு : ஓய்வு பெற்றவர்கள்/ ஓய்வு பெற இருக்கின்ற-வர்கள் பெரிதும் விரும்பத்தக்கது.சம்பளம் பேசித்தீர மானிக்கலாம். உடன் தொடர்பு கொள்ளவும். (CS 22270) (3/6)

077 619 1134/ 021 221 6166

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் (V) 1992 ஆம் ஆண்டு பிறந்த 2 இல் செவ்வாய் பொலிசாக பணிபுரியும் சொந்த இடம் பருத்தித்துறை தற்பொழுது மன்னா-ரில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS 22271) (3/6) T.P : 077 301 9182

## மணமகன் தேவை

யாழ். கௌரவ குடும்பம் (V) 1984 ஆம் ஆண்டு பிறந்த Swiss இல் உள்ள Doctor மணமகளுக்கு உள்நாட்டில் மணமகன் தேவை. (CS 48159) (3/6)

தொடர்புகளுக்கு : 077 427 1512

## புத்தகசாலை ஒன்றுக்கான வேலை வாய்ப்புகள்

1. விற்பனை பிரதிநிதி (ஆண் /பெண்)
2. உதவியாளர் (ஆண் / பெண்)

உங்கள் சுயவிபரக்கோவையை கீழ்காணும் Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவைக்கவும்

077 494 9683, 076 154 8866

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை. (CS 22274) (2/6)

071 450 9450

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இலத்திரனியல் ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனை பிரதி நிதிகள் தேவை. T.P :076 324 1761

(CS 22219) (3/6) Email - sjeevkan@gmail.com

## மீட்டல்,Past paper வகுப்புகள்

Physics 2022, 2023, 2024 (English and தமிழ் மொழி மூலம்)
A.Nithiyananthan (B.Sc, Dip.in. Ed)
முன்னாள் ஆசிரியர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி வீடுகளுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு :076 799 9005 (CS 22263) (3/6)

## ஞாயிறு 2:1 இலவசம்

**கோழிப்புக்கை, நாசி, அப்பம்**

யாழ்பாடி விடுதி, உணவகம்.
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
+9421 222 6868, +94777 340 026

## வயல் காணி தேவை

யாழ். மாவட்டத்தில் எப்பாகத்திலும், வயல் காணி (நெற் பரப்பு) விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

0777 123 504 (தரகர் வேண்டாம்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கை யில் அமைந்துள்ள நிலப்பரப்பு 2 ம் வீடும் விற்பனைக்கு உள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

T.P :075 369 4241 (CS 48160) (2/6)

## காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவிலில் 1.5 பரப்புக் காணி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.

074 1345805

## விற்பனைக்கு

சங்கரத்தையில் புதிதாக கட்டப்பட்ட வீட்டுடன் காணி (4 பரப்பு) விற்பனைக்கு.

Contact Number
Sailakshan Uthayasoorian
+ 94 77 221 5531 (CS 48172) (3/6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச் சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 9865 457




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நரி வருது நரி வருது காக்கா காக்கா பறந்துவா
குயில் வருது மயில் வருது கூட்டாஞ்சோறு கொண்டுவா
நரி வருது நரி வருது காக்கா காக்கா பறந்துவா
குயில் வருது மயில் வருது கூட்டாஞ்சோறு கொண்டுவா

- சிறுவர் பாடல்

Registered as a Newspaper

# சஞ்சீவி


மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 03 ஞாயிற்றுக்கிழமை (18.12.2022) சிகரம் : 128


நிலாந்தன்

# எல்லாரும் ஏறிச்சறுக்கிய குதிரையில் ஏறும் சக்கடத்தார்?



இராமநாதன் சகோதரர்களில் இருந்து தொடங்கி சம்பந்தர்கள் வரையிலும் சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுகால அரசியல் அனுபவம் அது. கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இலங்கைத் தீவு சுதந்திரம் அடைய முன்னும் பின்னும் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு நடத்திய பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள், எழுதிய உடன்படிக்கைகள் எதுவுமே வெற்றிபெறவில்லை.



ஆயுதப் போராட்டம் கொழும்பின் மீது நிர்ணயகரமான அழுத்தத்தை பிரயோகித்தது. அதனால் ஒப்பீட்டளவில் நீண்டகாலம் நிலைத்திருந்த இரண்டு உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. மூன்றாவது தரப்பொன்று தலையிடவேண்டிய தேவையும் ஏற்பட்டது.
இவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் தமிழ் மக்கள் சிந்திய ரத்தத்தின் விளைவாக எழுதப்பட்ட இரண்டு உடன்படிக்கைகள் ஒப்பிட்டுளவில் நீண்டகாலம் நிலைத்திருந்தன. முதலாவது இந்திய - இலங்கை உடன்படிக்கை.
அடுத்தது ரணில்- பிரபாகரன் உடன்படிக்கை. இது தவிர ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரும் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் எவையும் நீடித்திருக்கவில்லை. அவை சிங்களத் தரப்புகளாலேயே கிழித்து எறியப்பட்டன.

ஆயுதப் போராட்டமானது இலங்கைத்தீவின் அரசியல் ராணுவ வலுச்சமநிலையை மாற்றக்கூடிய பலத்தோடு காணப்பட்டது. அவ்வாறு வலுச்சமநிலை மாறும்போதெல்லாம் சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. அல்லது பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. ஆனால் 2009 க்கு பின் அவ்வாறு இலங்கைத் தீவின் அரசியல் வலுச்சமநிலையை மாற்றத்தக்க பேரபலம் தமிழ்த் தரப்பிடம் இல்லை.

முதலாவதாக தமிழ்த்தரப்பு ஒரு திரண்ட சக்தியாக இல்லை. இரண்டாவதாக, தமிழ்த்தரப்பு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தொடர்ச்சியான நிர்ணயகரமான போராட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை. தமிழ்த்தரப்பில் இப்பொழுது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மொத்தம் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. தலைக் கணக்கின்படி பார்த்தால் அது மிகச் சிறிய தொகை. தமிழ் மக்களின் அரசியல் இப்பொழுது தேர்தல் மைய அரசியலாகத்தான் காணப்படுகிறது. மக்கள் இயக்கம் கிடையாது. இந்த நிலையில் பூகோள அரசியலைக் கையாளப் போகின்றோம் புவிசார் அரசியலை கையாள போகின்றோம், என்று தமிழ்க் கட்சிகள் கூறிக் கொள்ளலாம். ஆனால் நடைமுறையில் அவ்வாறு புவிசார் அரசியலையோ அல்லது பூகோள அரசியலையோ கையாளத் தேவையான கட்டமைப்புகள் எவையும் தமிழ்க் கட்சிகளிடம் இல்லை. அதாவது தொகுத்துக் கூறின் 2009க்கு பின் தமிழ் அரசியல் எனப்படுவது "ரியாக்ட்டிவாகத்தான்" பதில் வினையாற்றும் அரசியலாகத்தான் இருக்கிறதே தவிர "புரோஆக்டிவாக" தனது செயல்களுக்கு ஏனைய தரப்புக்களை பதில் வினையாற்ற நிர்ப்பந்திக்கும் அரசியலாக இல்லை.

இப்பொழுதும்கூட பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் ரணில் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். அதுகூட வெளி நிர்ப்பந்தமே காரணம். பொருளாதார நெருக்கடிக்கான நிதி உதவிகளும் இனப்பிரசினைக்கான தீர்வும் ஒரே பக்கேஜ்ஜுக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துவதாகத் தெரிகிறது. கடைசியாக நடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவும் அதை வலியுறுத்தியது. எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதுபோல ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு வெளித்தரப்புகளிடமிருந்து வரும் நிர்பந்தங்கள் காரணமாக அவர் பேச வந்திருக்கிறார். இந்த நிர்பந்தங்கள் காரணமாக தமிழ்த் தரப்பின் பேரம் ஒப்பீட்டளவில் அதிகரித்து இருக்கிறதுதான். ஆனாலும் தனது கோரிக்கைகளை முன் நிபந்தனைகளாக வைத்து பேச்சுவார்த்தைகளை தொடங்குமளவுக்கு தமிழ்த்தரப்பு பலமாக இருக்கிறதா? என்ற கேள்விக்கு விடை இங்கு முக்கியம்.

ஆயுதப் போராட்டத்தின் பேரபலம் காரணமாகத்தான் வெளித்தலையீடுகள் ஏற்பட்டன. மூன்றாவது தரப்புகளின் மேற்பார்வையின் கீழ் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதலாவது வெளிநாட்டு பேச்சுவார்த்தை திம்புவில் இடம்பெற்றது. அங்கிருந்து தொடங்கி ஒஸ்லோ வரையிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. வெளிநாடுகளில் நிகழ்ந்த எல்லா பேச்சுவார்த்தைகளுக்கும் காரணம் ஆயுத போராட்டந்தான்.

ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலில் வெளியரங்கில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் என்று பார்த்தால் 2015 ஆட்சி மாற்றத்துக்காக நிகழ்ந்த சில ரகசிய சந்திப்புகளைத்தான் குறிப்பிடலாம். மற்றும்படி ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின் பேச்சுவார்த்தைகளை கொழும்புக்கு வெளியே கொண்டுபோக முடியவில்லை. மஹிந்த ராஜபக்ச சம்பந்தரை கிட்டத்தட்ட 17 தடவைகள் ஏமாற்றினார் என்று சம்பந்தரே கூறுகிறார். அதன்பின் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய யாப்புருவாக்கக் குழு 82 தடவைகள் சந்தித்தது. எல்லாவற்றையும் முடிவில் மைத்திரி குழப்பினார். நிலைமாறுகால நீதியின் கீழ் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயன்ற ரணிலின் முயற்சிகளை மைத்திரி முறியடித்தார். அம்முயற்சிகளுக்கு ஐ.நா. பின்பலமாக இருந்தது. ஐ.நா.வின் 30/1 தீர்மானம் அதற்குரிய அடிப்படைகளை வகுத்துக் கொடுத்தது.

ஆனாலும் ஐ.நா. இலங்கைத்தீவில் சம்பந்தப்பட்ட தரப்புகளின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆணையும் இருக்கவில்லை. அதனால்தான் 2018இல் ஒக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூறலுக்கான உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக முறித்தார். அதன்பின் ஆட்சிக்கு வந்த கோத்தாபய மேற்படி பொறுப்புக்கூறலுக்கான ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய இணைஅனுசரணையிலிருந்து விலகியது. அதாவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒப்புக்கொண்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்கியது. அனைத்துலக அரங்கில் தானும் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்ட பொறுப்புகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியும் என்பதற்கு அது ஆகப்பிந்திய உதாரணம் ஆகும்.

ஏற்கனவே இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட 13 வது திருத்தத்தை எந்த ஒரு ஜனாதிபதியும் முழுமையாக அமுல்படுத்தவில்லை. மாறாக 13வது திருத்தத்தின் உள்ளடக்கத்தை படிப்படியாக உருவி எடுத்துவிட்டார்கள். இப்பொழுது அது ஒரு கோறை. தான் பெற்ற பிள்ளையாகிய 13 வது திருத்தத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றாக வெட்டப்பட்ட பொழுது அதன் பெற்றோரில் ஒருவராகிய இந்தியா அதைப் பார்த்துக்கொண்டிருந்தது. 2009க்கு பின்னரும் கடந்த 13 ஆண்டுகளாக இந்தியா அதைப்பார்த்துக் கொண்டிருக்கிறது.

எனவே கொழும்புடனான பேச்சுவார்த்தைகள் என்ற நூற்றாண்டு கால தோல்விகரமான அனுபவத்தின் பின்னணியில், குறிப்பாக 87 ஆம் ஆண்டுக்கு பின்னரான கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலான அனுபவங்களைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ் மக்களுக்கு மிக கசப்பான பாடங்கள் கிடைக்கின்றன. பிராந்திய மட்டத்திலும் அனைத்துலக மட்டத்திலும் எழுதப்பட்ட உடன்படிக்கைகளில் இருந்து இலங்கை அரசாங்கங்கள் பின்வாங்கியிருக்கின்றன. ஒரு பிராந்தியப் பேரரசாகிய இந்தியாவும் இந்தவிடயத்தில் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியவில்லை. உலகப் பொதுமன்றமாகிய ஐ.நா.வும் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியவில்லை. அவ்வாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களின்மீது நிர்ணயகரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஆணை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. அப்படியென்றால் ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் எனப்படுவது வெறும் பிரசன்னமாக மட்டும் இருந்தால் போதாது. அதைவிட ஆழமான பொருளில் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஒரு பிரசன்னம் தேவைப்படுகிறது என்று பொருள்.

சமூக செயற்பாட்டாளராகிய செல்வின் சொன்னார்... நோர்வையின் அனுசரனையுடனான சமாதான முயற்சிகள் தோல்வியுற்றபின் ஒஸ்லோவில் நடந்த ஒரு சந்திப்பில் சிறப்புத்

05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்






# ஜெனிவா அறிக்கை ரணிலின் கைகளில்

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வு ஆரம்பமாவதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் உள்ள நிலையில், இலங்கை தொடர்பாக ஆணையாளர் தயாரிக்கவுள்ள அறிக்கையின் உள்ளடக்கங்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு மேலதிக முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படும் நிலையிலேதான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டை நடத்தியிருக்கிறார்.

இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்பது அமெரிக்க - இந்திய அரசுகள் உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பம். அதற்கேற்பவே ஈழத்தமிழர்கள் விவகாரம் கையாளப்பட்டும் வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அதற்குரிய நபராகச் சர்வசேத்தினால் சித்தரிக்கப்படும் நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தோற்றப்பாட்டை உருவாக்கும் நோக்கில் சர்வகட்சி மாநாட்டையும் ரணில் செவ்வாய்க்கிழமை நடத்தியிருக்கிறார். 2015 ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போது, இனப்பிரச்சினை என்பது நல்லிணக்கச் செயற்பாடாகவும் இலங்கை மக்களின் மனித உரிமை மீறல் விவகாரமாகவும் சுருக்கப்பட்ட ஒரு சூழலில், தற்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகிப்பது அதற்கான மேலதிகச் சந்தர்ப்பமாகவும் அமைந்திருக்கிறது. இந்த வாய்ப்புக்களை ரணில் இரண்டு வகையாகப் பயன்படுத்துகிறார்.

ஒன்று, இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பைத் தொடர்ந்து பேணி சிங்களக் கட்சிகள் மற்றும் பௌத்த அமைப்புகளின் எதிர்ப்பின்றி பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் ஈழத்தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருதல்.

இரண்டாவது, அமெரிக்க -இந்திய அரசுகளின் புவிசார் நலன்கள் மற்றும் இந்த நாடுகளின் நலனுக்குப் பாதிப்பில்லாத முறையில் சீனாவிடம் உதவிகளைப் பெறுவது. குறிப்பாக இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் அதன் முக்கியத்துவத்தை அதிகரித்துச் சர்வதேசத்தின் செல்லப்பிள்ளையாக இலங்கையை வைத்திருப்பதற்கான உத்திகளை ரணில் கையாளுகிறார் என்பது தெரிகிறது.

அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய வல்லாதிக்க நாடுகளுடன் முரண்பாட்டில் உடன்பாடாகவும் செல்லப்பிள்ளையாகவும் இருக்க வேண்டுமென்ற ரணிலின் உத்தி, ஈழத்தமிழர் விவகாரத்தை மையமாகக் கொண்டது என்பதில் சந்தேகமேயில்லை. கட்சி அரசியல் ரீதியாக சிங்கள அரசியல் பிரதிநிதிகள் முரண்பட்டாலும், ஈழத்தமிழர் விவகாரம் மற்றும் சர்வதேச உதவிகள் ஆகியவற்றைப் பெறுவதில் ஒருமித்த குரலில் செயற்படுவதால், ரணிலின் இந்த இரண்டு வகையான உத்திகளுக்கும் இலங்கையில் ஆதரவு அதிகரிக்கும் சூழல் அதிகமாகவே உண்டு. குறிப்பாக மார்ச் மாத ஜெனிவா அமர்வில் இலங்கை குறித்த தீர்மானம் இலங்கையைப் பாராட்டுவதோடு, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுக்கு அனைத்துத் தரப்பும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்படலாம். அப்படியொரு அறிக்கை ஜெனிவாவில் இருந்து வெளிவர வேண்டும் என்பதை சஜித் பிரேமதாஸவும் விரும்புகிறார். ஏனெனில் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றிய சஜித், இலங்கையின் இறைமை பற்றியும் சர்வதேச ஒத்துழைப்புகள் குறித்தும் எடுத்துரைத்திருக்கிறார். ஜே.வி.பி. கூட இலங்கையில் ஒற்றையாட்சிக் கட்டமைப்புத் தொடர வேண்டும் என்பதையே விரும்புகின்றது.

ஆகவே இந்த இடத்தில் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த்தரப்பை நோக்கி வகுக்கும் வியூகம், ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக சிங்களக் கட்சிகளின் ஒத்துழைப்புக்கு வழி வகுக்கும் என்பது வெளிப்படை. தேர்தல் ஒன்று நடைபெற்று வேறு சிங்களக் கட்சிகள் ஆட்சியமைத்தாலும், ரணில் வகுத்த மேற்படி இரண்டு வகையான உத்திகளையும் புதிதாகப் பதவிக்கு வரும் அரசாங்கம் தொடர்ந்து செயற்படுத்தும் என்பதில் ஐயமேயில்லை. ஏனெனில் கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகலுக்குப் பின்னரான சூழலில் சர்வதேசத்தின் இலங்கைக்கான ஒத்துழைப்பு என்பது தனிப்பட்ட முறையில் சிங்கள ஆட்சியாளர்களை மையமாகக் கொண்டதல்ல. அது இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்புக்குரியதாகவே நோக்கப்படுகின்றது. அதாவது எவர் ஆட்சி அமைத்தாலும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் பரிந்துரைகளை இலங்கை அரசு என்ற கட்டமைப்பு செயற்படுத்த வேண்டும் என்ற பொறிமுறை ஒன்றையே சர்வதேச சமூகம் தற்போது வகுத்துள்ளது.

சர்வதேசத்தின் இலங்கைக்கான ஒத்துழைப்பும், சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகளும் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் உரியதென வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார். ஏழு தசாப்தங்களில் இலங்கை சந்தித்துள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி எரிபொருள் ,உணவு தட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்ததன் காரணமாகவே சிங்கள மக்கள் குழப்பமடைந்தனர். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற போராட்டங்களினால் ஜூலை மாதம் கோத்தாபய ராஜபக்ச பதவியிலிருந்து அகற்றப்பட்டார். 40.6 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனில் சிக்குண்டுள்ள இலங்கைக்கு மேலதிக நிதி உதவி அவசரமாக தேவைப்படுகின்றது. ஆனால் கடன் மறுசீரமைப்பு விடயத்திலும் , சில பரிந்துரைகளை இலங்கை நிறைவேற்றத் தவறுவதாலும் ஒப்பக் கொண்ட நிதியை வழங்க சர்வதேச நாணய நிதியமும் தயக்கம் காண்பிக்கின்றது. இந்த இடத்திலேதான் சர்வதேச நாணய நிதியத்தின நிதி உதவிக்கும் அப்பால் ஏனைய நாடுகளிடம் இருந்தும் நிதி உதவியை எதிர்பார்ப்பதாக அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார். அமெரிக்கா ,இந்தியா ஆகிய நாடுகளிடம் இருந்து நான்கு அல்லது ஐந்து பில்லியன் டொலரை எதிர்பார்ப்பதாகவும் அலி சப்ரி ரொய்ட்டர்ஸுக்கு தெரிவித்துள்ளார்.

அதிகளவு கடன்களை வழங்கிய சீனா, ஜப்பான் , இந்தியா போன்ற நாடுகளிடமிருந்தும் தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்தும் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான உத்தரவாதங்களை பெறுவதற்கான முயற்சிகளிலும் இலங்கை ஈடுபட்டுள்ளதாக டெய்லி மிரர் நாளிதழ் கூறுகின்றது. ஆகவே இவ்வாறான நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலேதான் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்க அல்லது தீர்வு பற்றிய பேச்சுக்களைக் கையில் எடுத்து இலங்கையின் அரசியல் ஸ்தரத்தன்மையைச் சர்வதேசத்துக்குக் காண்பிக்க முற்படுகிறார். அதன் மூலமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வையும் காண முடியும் என்ற புரிதலையும் சிங்களக் கட்சிகள் மத்தியில் பரப்புரை செய்கிறார். ரணிலின் இந்த முயற்சிக்கு சஜித் உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சி சிங்கள அரசியல் பிரதிநிதிகள் மறைமுகமாக ஆதரவு கொடுக்க ஆரம்பித்திருக்கின்றனர். ஏனெனில் இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்பு என்பது தனியே ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது வேறு சிங்களக் கட்சித் தலைவர்களுக்கோ உரியதல்ல என்ற உறுதியான புரிதல் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்க - இந்திய அரசுகள் இந்த விடயத்தில் பிடியாக நிற்கின்றன. சீனா ,ஜப்பான் போன்ற நாடுகளும் இலங்கையோடு அந்த நிலைப்பாட்டில்தான் செயற்பட்டு வருகின்றன என்பதை கோத்தாபயவின் பதவி விலகலுக்குப் பின்னரான [illegible] கொடுக்கின்றன. இந்தப் பின்னணியிலேதான் ஈழத்தமிழர் விவகாரத்தை பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிக்குப் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் முரண்பாட்டில் உடன்பாடாக ஒத்துழைக்கின்றன. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குத் தனிப்பட்ட சந்திப்பில் கூறியுள்ள நிலையில், அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது பற்றியும் தன் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்திய மத்திய அரசும் இந்தக் கருத்தை ரணிலிடம் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆகவே 2012 ஆம் ஆண்டில் இருந்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு அறிக்கைகளிலும் வலியுறுத்தப்பட்டு வந்த பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வாகவே அமுல்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு முன்னுரிமை என்ற இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மாற்றம் இதன் பின்னணியிலேயே அமைந்திருக்கிறது, தனது புவிசார் அரசியல் - பொருளாதார நலன் சார்ந்து 'பதின்மூன்று' என்ற விடயத்தை இந்தியா அழுத்தினாலும், இலங்கை அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துமா இல்லையா என்பதில் இந்தியாவுக்கு கரிசனை இருக்க வாய்ப்பில்லை.

ஏனெனில் தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை என்ற கதையை 2009 க்குப் பின்னரான சூழலில் கிளப்பியது இந்தியாதான். அதனையே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட சிங்கள அமைச்சர்கள் சிலரும் தற்போது ஊதிப் பெருப்பித்துள்ளனர். ஆகவே இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்கள் ஆகியவற்றைச் சிங்கள ஆட்சியாளர்கள் மிக நுட்பமாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர் விவகாரத்தை உள்ளக விவகாரமாகவும், இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்ளும் தற்போது முடக்கிவிட்டனர் என்பது பகிரங்கமாகியுள்ளது.

இலங்கை விவகாரத்தை உள்ளக விவகாரமாகவும், போர்க்குற்ற விசாரணையை உள்ளகப் பொறிமுறைகள் ஊடாகவும் முன்னெடுக்கலாம் என்ற கோணத்தில் மார்ச் மாதம் வெளிவரவுள்ள ஜெனிவா அறிக்கை அமையும் என்பதும் வெளிப்படை. ஆகவே வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சிக் கட்டமைப்புத்தான் நிரந்த அரசியல் தீர்வு என்பதிலும், இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்றும் ஒருமித்த குரலில் கூறுவதற்குத் தயங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இன்று இந்தியா மற்றும் சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பிய தீர்வுக்கு நிபந்தனைகள் இன்றி உடன்பட்டுள்ளது.

'பதின்மூன்று' ஆரம்பப் புள்ளி என்பது ஈழத்தமிழர்களுக்குச் சர்வதேச நீதி கிடைக்காது என்பதற்கான வாசகங்களே தவிர வேறெதுவுமில்லை. இதனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்வதாக இல்லை. காணி அபகரிப்பு உள்ளிட்ட தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகள் என்பது போரின் பக்க விளைவுகள். ஆனால் அந்தப் பக்க விளைவுகளுக்குரிய தீர்வை இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. மாறாக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு நிரந்த அரசியல் தீர்வு முழுமையாக முன்வைக்கப்படுமானால், அதற்குரிய தீர்வுகள் எட்டப்படும். அத்துடன் இன அழிப்புக்கான சர்வதேச நீதியை உரிய முறையில் கோரினால் காணாமல் போனோர் பற்றிய உண்மைகள் வெளிப்படும். ஆனால் இவற்றை ஜனநாயக வழியில் அணுகுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வலு இல்லை.

தேர்தல் அரசியல், இந்தியாவின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிதல் மற்றும் தனிப்பட்ட சலுகைகளை எதிர்பார்ப்பது போன்ற அற்பசொற்ப ஆசைகளுக்குச் சில தமிழ்ப் பிரதிநிதிகள் அடிமைப்பட்டிருக்கின்றனர் என்பதை அடையாளமிட்டே சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாண்டு வருகின்றனர். இதற்கு ரணில் மிகப் பொருத்தமானவராக அமைந்திருக்கிறார் என்பது கண்கூடு. ஆகவே கட்சி அரசியலைக் கடந்து, சிவில் சமூக அமைப்பு ஒன்று ஜனநாயக வழியில் முழுநேரப் பணியில் ஈடுபடுமானால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதுவுமேயில்லாத இணக்க அரசியல் செயற்பாடுகளுக்கு முடிவுகட்டலாம். தனிநபர் அரசியல், கூட்டுப் பொறுப்பற்ற தன்மை போன்றவற்றையும் இல்லாமல் செய்யலாம்.

ஈழத்தமிழர்களுக்கான உறுதியான தலைமை யார் என்பதை வரலாறு அடையாளமிடும் காலம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் சுற்றிய ராஜபக்சக்கள்



ந.பரமேஸ்வரன்

தாங்கள் வாழ்வதற்கு ஊர்ப் பணத்தில் வீடு கட்டினார்" எழுபதுகளின் நடுப்பகுதியில் வெளிவந்த எம்.ஜி. ஆரின் "நேற்று இன்று நாளை" திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல் வரிகள். சிங்கள மக்களின் இரட்சகர்களாக கருதப்பட்ட ராஜபக்ச சகோதரர்கள் 2021 ஆம் ஆண்டு தமது வெளிநாட்டு பயணங்களுக்காக செலவு செய்த பணவிபரத்தை 'டெய்லி மிரர்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலமே இந்த தகவலை இணையத்தளமொன்று பெற்றுள்ளது. அந்தவகையில் இலங்கையில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை கொண்டு வருவதற்காக அயராது உழைத்த முன்னாள் தகவல் திணைக்களப் பணிப்பாளர் ரங்க கலன்சூரிய பாராட்டப்பட வேண்டியவர்.

2021 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் மேற்கொண்ட வெளிநாட்டுப்பயணங்களுக்குச் செலவு செய்த மொத்தப் பணம் 44 மில்லியன் ரூபா. இந்த தகவலை ஜனாதிபதி செயலகமும் பிரதமர் செயலகமும் வழங்கியுள்ளன . பொதுவாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் ஒரு தகவல் கோரப்படும் பட்சத்தில் 14 நாள்களுக்குள் அந்தத் தகவல் வழங்கப்பட வேண்டும் , அதிக பட்சம் 21 நாள்களுக்குள் கேட்கப்படும் தகவல் வழங்கப்படவேண்டும்.

ஆனால் இந்த விடயத்தில் பத்து மாதங்களின் பின்னரே கோரப்பட்ட தகவல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கோத்தாவும், மஹிந்தவும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டமைக்கான காரணத்தை ஜனாதிபதி செயலகமோ பிரதமர் அலுவலகமோ வெளியிடவில்லை.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை விட பிரதமர் மஹிந்த ராஜபக்சவே கூடுதலான பணத்தை செலவு செய்துள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ச இரண்டு தடவை வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டமைக்கான செலவு 37 மில்லியன் ரூபா. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மூன்று தடவைகள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டமைக்கான செலவு 7 மில்லியன் ரூபா. பிரதமர் மஹிந்த ராஜபக்ச 2021 ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கும் இத்தாலிக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பங்களாதேஷ் சுதந்திர தினத்துக்கும் பின்னர் பங்களாதேஷ் ஜனாதிபதியின் பிறந்த தினத்துக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச விஜயம் செய்துள்ளார். இதற்கான செலவு 15 லட்சத்து 63 ஆயிரத்து 962.53 ரூபா

இத்தாலியில் நடைபெற்ற ஜீ - 20 மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது மனைவி, மகன், உறவினர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என ஒரு பட்டாளத்துடன் சென்று வந்துள்ளார். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்,ஐ.நா.வுக்கன இலங்கைத் தூதுவர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். இத்தாலியில் உள்ள உணவகம் ஒன்றில் இவர்கள் உணவருந்தும் புகைப்படத்தை 'தமிழ் கார்டியன்' வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் இத்தாலிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டமைக்கான செலவு 2 கோடியே 64 இலட்சத்து ஆயிரத்து 901.61 ரூபா.

> **கோத்தபாய ராஜபக்சவை விட பிரதமர் மஹிந்த ராஜபக்சவே கூடுதலான பணத்தை செலவு செய்துள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ச இரண்டு தடவை வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டமைக்கான செலவு 37 மில்லியன் ரூபா.**

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச 2021 ஆம் ஆண்டு மூன்று தடவை வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார். முதல் தடவை நியூயோர்க்குக்கு விஜயம் செய்துள்ளார். இதற்கான செலவு 54 லட்சத்து 61 ஆயிரத்து 21.71 ரூபா இரண்டாவதாக பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ளார். இதற்கான செலவு 17 லட்சத்து 85 ஆயிரத்து 210.42 ரூபா. மூன்றாவதாக ஐக்கிய அரபு இராச்சியத்துக் கு விஜயம் செய்துள்ளார். இதற்கான செலவு 5 லட்சத்து 21 ஆயிரத்து 888 ரூபா.

ராஜபக்ச சகோதரர்கள் இவ்வாறு பொது மக்களின் பணத்தை வீண்விரயம் செய்தமையும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று டெய்லி மிரர் வெளியிட்ட தகவல் உறுதிப்படுத்துகின்றது.

---

# அறிந்ததும் அறியாமலும்

சுழியன்



## வந்தால் ராணியாகத்தான் வருவேன்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் காலடி எடுத்துவைத்து, பின்னர் குத்துக்கரணம் அடித்து இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட டயானா கமகேயின் அரசியல் இருப்பு ஆட்டம் காண தொடங்கியுள்ளதாம். இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிவகிப்பதற்கு அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டம் ஊடாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டை பயன்படுத்தி, டயானா கமகேவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அவர் இலங்கைப் பிரஜை அல்லர் என முறைப்பாட்டாளர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் தீர்ப்பு இன்னும் வெளியாகாத போதிலும், டயானாவுக்கு எதிராகவே தீர்ப்பு வருமென ஐக்கிய மக்கள் சக்தி நம்புகின்றது. இந்த நிலையில் டயானாவின் இடத்துக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்துள்ளது. பெண் பிரதிநிதியொருவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி குறித்த வாய்ப்பை ஏற்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார். 'மக்கள் ஆசியுடனேயே நான் சபைக்கு வருவேன்' என்று ஹிருணிகா கூறியுள்ளாராம்.


எனவே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டாரவை தேசிய பட்டியல் ஊடாக சபைக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

## ரில்வின் ஓய்வு?

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, இன்னும் சிறிது காலப்பகுதிக்குள் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளாராம்.

இதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு அதாவது புதிய பொதுச்செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நியமிக்கப்படவுள்ளாராம்.

இதற்கான முன்னேற்பாடாக கம்பஹா மாவட்ட தலைவர் பதவியை அவர் துறக்கவுள்ளார் எனவும், அந்த இடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.



## யானைச் சவாரிக்குத் தயார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு தீர்மானித்துள்ள விடயம் மொட்டு கட்சியை கிலிகொள்ள வைத்துள்ளது. பிரசன்ன ரணதுங்க, ரொஷான் ரணசிங்க, காஞ்சன விஜேசேகர உள்ளிட்டோர் 'யானைச் சவாரி'க்கு தயாரானோரின் பட்டியலில் முன்னிலையில் இருக்கின்றனர். அதேபோல உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் உட்பட மேலும் சில மொட்டு கட்சி ஆதரவாளர்களும் ரணிலுக்கு நேசக்கரம் நீட்ட தயாராகிவிட்டனராம்.

இதனால் மொட்டு கட்சி ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச குழம்பிப்போயுள்ளாராம். அதுமட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவசரமாக சந்தித்து பேச்சும் நடத்தியுள்ளாராம். தயவு செய்து கட்சியை உடைத்துவிட வேண்டாம். வேண்டுமானால் கூட்டணி அமைப்போம் என மன்றாடியுள்ளாராம் பஸில். இதனையடுத்தே 'யானை - மொட்டு' கூட்டணி தொடர்பான கருத்தாடல் அரசியல் களத்தில் உருவாகியுள்ளது. மொட்டு கட்சி தரப்பில் இருந்தே இதற்கான பிரசாரம் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

## பின்வாங்கல்



2024 ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் முடிவிலிருந்து நாமல் ராஜபக்ச பின்வாங்கியுள்ளாராம்.

2024 இல் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராக களமிறங்க வேண்டும் எனவும், அதன் பின்னர் நடைபெறும் தேர்தலில் நாமல் ராஜபக்ச நிச்சயம் களமிறக்கப்படுவாரென பல தரப்புகளும் முன்வைத்த கருத்தையடுத்தே நாமல் இவ்வாறு பின்வாங்கியுள்ளாராம்.

## பொன்சேகாவின் கோபம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடுமையாகத் திட்டியுள்ளாராம்.


ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது மாநாடு கொழும்பு, கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது பேச்சாளர்கள் பட்டியலில் கட்சியின் தவிசாளர் பொன்சேகாவுக்கு இறுதி இடம் வழங்கப்பட்டுள்ளது.

பொன்சேகா உரையாற்ற சென்ற வேளை, மைதானத்தில் ஆரம்பத்தில் இருந்த மக்கள் கூட்டம் இருக்கவில்லை. இதனால் கடுப்பான அவர், " வெற்றுக் கதிரைகளை பார்த்து பேசுவதற்கு நான் தயாரில்லை, எல்லாக் கட்சிகளிலும் ஊழல்வாதிகள் உள்ளனர். 15 வீதமான நல்லவர்களும் , அனுபவம், ஆற்றல் உள்ளவர்களும் இருக்கின்றனர். அவர்களை இணைத்து ஆட்சி அமைக்கப்படும்." எனக் கூறிவிட்டு விடைபெற்றார். அத்துடன் நின்றுவிடவில்லை, " ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்யத் தெரியாத நீங்கள், இப்படி நாட்டை ஆள்வீர்கள்?" என எதிர்க்கட்சித் தலைவரிடம் வந்து, கடுந்தொனியில் குறிப்பிட்டுவிட்டு பொன்சேகா புறப்பட்டு சென்றாராம். குறித்த மாநாட்டில் ராஜிதவுக்கு உரையாற்றுவதற்கு இடமளிக்கப்படவில்லை. அவர் ஆளுங்கட்சி பக்கம் செல்வது உறுதியாகியுள்ளது. சுகாதார அமைச்சுப் பதவியும் தயார் நிலையில் இருக்கின்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

113




அனுப்புபவர் பெயர்:........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..................................................................
கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. திடுக்காட்டம் 4. வகுப்பு 6. பருவம் 7. ஐக்கியமாகும் இடம் 10. கீர்த்தி 12. ஔவையார் இயற்றியது 14. மூத்தது 16. ராசிகளில் ஒன்று 19. அரைவாசி 20. இரண்டுதான் வேறில்லை 21. யானை மேலிருக்கும் பீடம் 22. மீனாட்சி கோலோச்சும் இடம்

### மேலிருந்து கீழ்

1. திசைமாற்றுதல் 2. குற்றம் செய்தால் இதுவும் செய்வார்கள் 3. தானிய அளவை அலகு 4. செய்தி 5. ஒரு குடிவகை 8. சரிவு 9. கண் 11. அறுபத்திநான்கு வகையுடையது 12. சீரிய புத்தி 13. பலகாரங்களில் ஒன்று 15. அக்கினி 17. நாற்காலி 18. ஏவுகணை வகைகளில் ஒன்று 20. துறவி

### சொற்சிலம்பம் போட்டி 112 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாசாங்கு 4. வகு 6. தாடி 7. சமாளிப்பு 10. பலன் 11. பகை 12. கேவலம் 14. பாம் 15. சரிகை 16. நேர் 18. பருவமழை 20. காவல் 22. திரு 23. மல்லி 24. சா 25. விடை

**மேலிருந்து கீழ்**

1. பாதாதிகேசம் 2.சாடி 3. குசலம் 4. வளி 5. குப்பம் 8. மான் 9. புகை 10. பலகை 13. வரி 14. பார்வதி 16. நேரு 17. கோழை 18. பல் 19. மருவி 20. கால் 21. வலி.

**சொற்சிலம்பம் போட்டி இல.113**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
23.12.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 112 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
யூ.ஜெறோசியா
30/48, பூண்டிமாதா வீதி, எழில்நகர் மன்னார்.

**2 ஆம் பரிசு**
து. அன்பழகன்
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை

**3 ஆம் பரிசு**
க.புஸ்பநாதன்
பறாளை வீதி, சுழிபுரம்

**4 ஆம் பரிசு**
தி.சாங்கவி
இமையாணன் மேற்கு உடுப்பிட்டி

**5 ஆம் பரிசு**
தி.செல்வராணி
பருத்தித்துறை வீதி, நல்லூர்



# 'வேண்டடத்தக்கது' அறிவோய் நீ

பேராசிரியர் கி.விசாகரூபன்

இப்பமாதிரி பள்ளிக்கூடத்திலை 'கன்ரீன்' எல்லாம் அப்ப இல்லைப் பாருங்கோ. அத்துடன் 'கிராமம்' வேற. இப்பவெண்டால் 'மிதிவெடி', 'றோல்ஸ்', 'பற்றிஸ்', 'யூஸ்' என எத்தனை சாப்பாட்டுச் சாமான்களை கன்ரீனில வேண்டலாம். தொங்கிய நிலையில் உள்ள ஒரு தண்டவாளத் துண்டில இரும்புப் பொல்லால பத்தரைமணி அளவில் ஒரு அடி விழும்.

அதுதான் 'இடைவேளை'. பட்டிப் படலையைத் திறந்த மாடுகள் போல பள்ளிக்கூடத்துக்கு வெளியே நாம் இருகிளைகளாக ஓடுவோம். ஒரு குறூப் சின்னத்துரையப்பு கடையில் புளுட்டோ, நைஸ் பப்படம், சிவப்புச் சாயம் பூசிய பொரி உருண்டை போன்றவற்றை வாங்கித்தின்ன, நாமோ 'ஐஸ்பழ'க் காரன் பக்கம் ஓடுவோம். அவர் மிகவும் நல்லவர். வாய் பேசமாட்டாதவர். அந்தக் காலத்திலேயே 'லிங்கத்தை' எனக்கு கிராமத்தில் அறிமுகப்படுத்தியவர். காசு குடுத்துத்தான் ஐஸ்பழம் வாங்க வேண்டுமெண்டில்லை. போத்தல், அலுமினியம், பித்தளை, வாளிக் கம்பி என கிராமத்துக் கடவுளர் போல எதனைப் படைத்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்வார். அவருக்கென்ன? கனக்க ஏன்? 'வேண்டத்தக்கதறிவோனாக' அவர் இருந்தார். பள்ளிக்கூடத்துக்கு வரும்போதே கைக்களவான ஒரு 'ஐட்டத்தை' (Item) வீட்டாருக்குத் தெரியாமல் கொண்டுவந்து, எமக்குத் தெரிந்த ஒரு இடத்தில் அதனை ஒளித்து வைத்து விடுவோம். சிலவேளை வீட்டுக்காரர் அந்த ஐட்டத்தைக் காணாமல் தேடும்போது நாமும் சேர்ந்து தேடுவோம். இந்தப் 'பண்டமாற்று வியாபாரம்' எமக்குப் பிடித்திருந்தது. வாய்வேறு பேசமுடியாதவர் என்பதால் ஒரு இரட்டைப் பாதுகாப்பும் இருந்தது. 'உறுபொருளுக்கு' ஏற்ப இரண்டு மூண்டு நாளைக்கு ஐஸ்பழம் தருவார். பித்தளைக் கைவிளக்கொன்றைக் கொடுத்து நாலைந்து நாள் ஐஸ்பழம் வாங்கிக் குடித்த ஞாபகம் இருக்கு. ஆனால் பாருங்கோ ஆற்ற கண் பட்டதோ இது நீடிக்கவில்லை. அடிக்கடி வந்து போனதால் ஊரில் உள்ளோரில் பலர் அவருக்கு நண்பர்களாயினர். அவருடன் பேசுவதற்கென்றே கைப்பாசை, நயனப் பாசைகளை வேறு கற்றுக்கொண்டனர்.

> காசு குடுத்துத்தான் ஐஸ்பழம் வாங்க வேண்டுமெண்டில்லை. போத்தல், அலுமினியம், பித்தளை, வாளிக்கம்பி என கிராமத்துக் கடவுளர் போல எதனைப் படைத்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்வார். அவருக்கென்ன? கனக்க ஏன்? 'வேண்டடத்தக்க தறிவோனாக' அவர் இருந்தார்.

இப்பிடித்தான் ஒருநாள்..... றோட்டுக் கரையில் உள்ள எமது வீட்டுக்கு முன்பு எனது வீட்டாரால் அவர் மறிக்கப்பட்டார். அவர் முன்பு நான் ஆஜர்படுத்தப்பட்டேன். கம்பியில்லாத வாளி 'தடயப்பொருளாக' அவர் முன்பு கொண்டு வரப்பட்டது. என்னைக் காட்டி வாளிக்கம்பி குறித்து வினவப்பட்டது. பல்வேறுவிதமான 'கஸ்தங்களின்'(அபிநயம்) மூலம் என்னை அவர் தெளிவாகக் காட்டிக் கொடுத்தார். வாளிக்கம்பி 'கேஸ்' மட்டுமல்ல காணாமற்போன பிறகேசுகளும் என்ர தலையில் வந்து சேர்கிறது. அதிலை ஒண்டு 'ஒரு ரூபா ஐஸ்பழத்திற்காக காப்போத்தல் மண்ணெண்ணையைக் கீழே கவிட்டு ஊத்திப்போட்டு போத்தலைக் கொடுத்த கேஸ்' வியாபாரி விடுவிக்கப்பட்டார். எனது நிலையை நான் சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டுமென்றில்லை. 'காட்டிக்குடுக்கிறவன்களை மண்டையில சுடுகிற காலம் அது. அதுவரைக்கும் அந்தத் தண்டனையில எனக்குப் பெரிதும் உடன்பாடிருக்கவில்லை. ஆனால், அன்றைக்கு நான் இருந்த சூழ்நிலையில் அது மெத்தச் சரியென்றே எனக்குப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இராகவன்

## பதிவும் பதிவேடுகளும்?

இரண்டையுமே முழுமையாக்க எத்தனித்துக் கொண்டிருக்கிறேன். இது பொதுவாக நிகழக் கூடியதொன்றுதான். பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படலாம். முதன்மையானது பதிவினதும் பதிவேடுகளினதும் முக்கியத்துவம் உணரப்படாத பருவத்தில் நிகழ்பவற்றுக்கு பதிவிருக்காது. முக்கியத்துவமுணரப்படும் பருவத்தில் பதிவு செய்வதற்கான காலங்கடந்திருக்கும். அத்தோடு தற்போது பதிவு செய்ய வேண்டியவையும் சேர்ந்திருக்கும்.

இதனால் முழுமையான பதிவென்பது படிப்படியாகவே நிகழும். அடுத்தது நிகழ்ந்த காலத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டியதென அடையாளங்காணப்பட்டிருந்தும் பதிவு செய்யப்பட முடியாதிருக்கும் நிகழ்வு அல்லது நிகழ்வுகளால் முழுமையென் பது சாத்தியப்படாமலும் போகலாம். ஏனெனில் அந்நிகழ்வை அல்லது நிகழ்வுகளைத் தற்போதும் பதிவு செய்ய முடியாதிருக்கலாம். இன்னொன்று பதிவு செய்யவேகூடாது என்ற நிலைப்பாடிருந்தாலும் முழுமையென்பது சாத்தியமில்லை. இன்னமும் பதிவினதும் பதிவேடுகளினதும் முக்கியத்துவத்தை உணராத பருவத்திலிருந்தாலும் பதிவும், பதிவேடுகளும் முழுமை பெறச் சாத்தியமில்லை.

இதையெல்லாம் கடந்த நிலையில்தான் பதிவும் பதிவேடுகளும் முழுமைபெறக்கூடுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பதிவுகளைச் சாதாரணம் ,விசேடம் எனப் பிரிக்க வேண்டியதில்லை. பதிவுகள் எல்லாமே ஏதோவொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவேயிருக்கும். அது ஒவ்வொருவர் நோக்கிலும் வேறுபடக்கூடியது. எனக்கு மிக முக்கியமானதாகவிருக்கும் பதிவொன்று உங்களுக்கு எந்தவகையிலும் அவசியமற்றதொன்றாக அமையலாம். அதனால் நீங்கள் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை என்பது பக்கச்சார்பு கொண்ட கருத்து நிலையாகும். பதிவொன்றின் பெறுமதி உணரப்படாத நிலையில் இது நிகழ்வது வழமையானதொன்றுதான். ஏதோவொருவகையில் எந்தவொரு பதிவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவேயிருக்கும் என்ற நிலைக்கு வந்துவிட்டால் பதிவொன்றின் பெறுமதி தெரியவரும். அது தெரியவந்துவிட்டால் எந்தவொரு பதிவினையும் உங்களால் புறக்கணிக்கமுடியாது.

இங்கேதான் ஒரு பதிவின் முடிவுத் திகதி அல்லது ஆயுட்காலங் குறித்த கேள்வியெழும். உண்மையில் ஒரு பதிவுக்கு காலாவதித் திகதி அல்லது ஆயுட்கால முடிவு என்பதிருக்கிறதா? எனக் கேட்டால் உடனடியாக நேரான பதில்தான் முன்வைக்கப்படலாம். மாறாகப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியது. பதிவில் குறிப்பிடப்படும் விடயம் முடிவுத் திகதியைக் கொண்டிருக்கலாம். ஆனால் எந்தவொரு பதிவுக்குமே முடிவுத் திகதியென்பதில்லை. ஒரு பதிவு காலக்கழிவில் ஆவணமாக மாறிவிடும். ஆவணத்துக்குப் பெறுமதியிட முடியுமா? அதற்கு முடிவுத்திகதியென்ன? அதன் ஆயுட்காலம் என்ன? என்றெல்லாம் கேள்விகள் எழலாம். பதிவொன்று ஆவணமாகிவிட்டாலே அதற்குப் பெறுமதியிட முடியாது. அதற்கு முடிவுத் திகதியுமில்லை.

குறிப்பிட்ட ஆயுட்காலமென்பதுமில்லை. குறித்த ஆவணம் தொடர்ந்து பேணப்பட்டு வருமானால் அது தொடர்ந்துமிருக்கும். திட்டமிட்டு அழிக்கப்படாத வரையில் இது நடைமுறையிலிருக்குமென்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். பதிவு செய்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களுக்கு முக்கியமாக ஒரு விடயத்தைச் சொல்ல நினைக்கிறேன். நீங்கள் சந்திக்கும், நாளாந்தம் உறவாடும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பதிவேட்டைத் திறந்து பேணிவரலாம். அதில் அவரைச் சந்தித்து உரையாடியபோது நிகழ்ந்ததையெல்லாம் பதிவு செய்யலாம். இதையும் தினக்குறிப்பேட்டுப் பதிவுகளையும் வெவ்வேறாகக் கருதிக் கொள்ள வேண்டும். இரண்டையும் ஒன்றெனக் கருதிக் குழம்பக் கூடாது என்பதும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும். இதை நான் சொல்லும்போது நடைமுறைச் சாத்தியமற்றதாகத் தோன்றலாம். இதற்கு முதற்கட்டமாக நீங்கள் யாரேனுமொருவருக்குத் தனியான பதிவேட்டைத் திறந்து பதிவினை மேற்கொண்டு பார்க்கலாம். ஒரு மாதகாலம் பதிவுகளை மேற்கொள்ளும்போது வெகுசுவாரசியமாகவிருக்கும். பின்னர் நீங்களே தன்னியல்பாக இதை மேற்கொள்ள ஆரம்பித்துவிடுவீர்கள். அதற்குப் பின்னர் உங்களுக்கு எந்தவொரு வழிகாட்டலோ ஆலோசனையோ தேவைப்படாது. மேலும் இதனை மற்றவர்களை மேற்கொள்ளத் தூண்டுபவராக மாறிவிடுவீர்கள். இன்னுமொன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் மேற்கொள்ளும் பதிவுகளை ஒரு மாதங்கடந்தபின்பாக அல்லது உங்களுக்கு வசதியான கால இடைவெளியில் அவகாசமெடுத்து வாசித்துப் பார்க்க வேண்டும். இந்த வாசிப்புத்தான் பதிவு செய்தலின் மீதான ஆர்வத்தைத் தூண்டுவது மட்டுமல்லாமல் அதனது முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாக அமையும்.

## கனவுகள்?

அல்லும் பகலும் கனவு காண்பதற்கு விதிக்கப்பட்டிருக்கிறோம். அல்லில் காண்பது அற்கனவு, பகலில் காண்பது பகற்கனவு. எந்தவிதத் திட்டமிடலுமின்றிச் சம்பவிப்பது தான் கனவு. இதனைப் பொதுவாக அல் கனவு என்றே குறிப்பிடுவர். இது வழமையாக நிகழக்கூடியது. அல் என்பது இரவினை குறிப்பதாகும். அதாவது இரவில் சம்பவிக்கின்ற கனவைத்தான் அல் கனவு எனலாம். வழமையாக சம்பவிக்கும் இதற்கு மாறாக முறையான திட்டமிடலுடன் நிகழ்த்தப்படுவது பகற்கனவு. அதாவது பகலில் நாங்கள் விரும்புவதையெல்லாம் நிகழ்த்திப்பார்த்து தற்காலிக இன்பத்தையடைந்து கொள்வதைக் குறிக்கும். எனது நோக்கில் நானிதை விரும்புவதுமில்லை, நாடியதுமில்லை . என் நாட்டமும் விருப்பமும் அல் கனவு மீது தான் . உங்களனுமதியுடன் இங்கே சில அல் கனவுகளை கோர்வையாக்கித் தருகிறேன். வாசலில் மாடம் கொண்ட வீடுகளுக்குள் புகுந்து வெளியேறுகிறேன். ஒவ்வொரு வீட்டிலிருக்கும் சண்டியனும் என்னை கையில் அகப்பட்ட ஆயுதங்களோடு துரத்தி வருகிறார்கள். முத்து விநாகயனின் தேரடியே தஞ்சமென ஓடுகிறேன். தேரடியில் யாருமில்லை உட்காருகின்றேன். அப்போது பார்த்தால் அங்கே முத்து விநாயகன் கோவிலுமில்லை, குளமுமில்லை ,தேரடியுமில்லை . நான் வேறெங்கோ வழி மாறி வந்து உட்கார்ந்திருக்கிறேன் அதுவும் ஒருவிதத்தில் நன்மைபயக்க கூடியது தான். நேரம் நள்ளிரவாகி விட்டது .

என் மூன்றாவது ஒருதலைக் காதலியின் வீட்டுக்கு முன்னிருக்கும் வீதியால் சிற்றுழவியந்திரமொன்றில் முகமூடியணிந்த ஏழுபேர் மும்முலையம்மன் சிலையை கடத்திச் செல்ல , நான் அவர்களைப் பின் தொடர்ந்து செல்கிறேன். முடிவில் கோவிற் சந்தைக்கு வந்து சேர , பகலாகி விட்டது.அங்கே துறைமுகமொன்றையமைப்பதில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். கடலைப் பற்றி கேட்கலாமெனப் பார்த்தால் அந்தச் சிலரும் மாயமாகி விட்டனர். அப்போது என்னைத் துரத்திய சண்டியர்கள் அங்கே வந்து சேர்ந்து விட்டார்கள். எனக்கு அவர்களிடமிருந்து தப்பிச் செல்லத் தோன்றவில்லை. அவர்களில் ஒருவன் வந்து என்னிடம் 'இந்த வழியால் ஒரு திருடன் ஓடிச் சென்றதைப் பார்த்தாயா? ' எனக் கேட்கிறான். அவனுக்கு என்னை அடையாளந் தெரியவில்லை என்பது நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. இது வரைக்கும் உங்களைத்தவிர யாருமிங்கேவருகைதரவில்லை என நான் அவனுக்குச் சொன்னதும் எல்லோரும் மாயமாகி விட்டனர். இப்போது நான் மட்டுமே தனித்திருக்கிறேன். துறைமுகமுமில்லை ,கோவிற் சந்தையுமில்லை. அவ்விடத்தை விட்டு வெளியேறுவதுதான் பாதுகாப்பானது எனத் தோன்றுகின்றது. அங்கிருந்து கிழக்கு நோக்கி நடக்கிறேன்.என்னைக் கடந்து ஒருவர் சைக்கிளில் போகிறார். 'என்னை ஏற்றிச் செல்ல முடியுமா ?'எனக் கேட்கிறேன். அடுத்து வந்த திருப்பத்தில் அவர் மறைந்து விட்டார். நானும் இன்னும் விரைவாக நடக்கிறேன். பாதை செங்குத்தாக இறங்குகிறது. நான் சறுக்கிக் கொண்டே போகிறேன். அங்கே ஒரு மண்ணிறக்குதிரை வாலைச் சுற்றியபடியே நின்று கொண்டிருக்கிறது. நான் சறுக்கிக்கொண்டு போன வேகத்தில் எம்பி, குதிரை மேல் ஏறிவிடுகிறேன். உடனே குதிரை பறப்பது போல ஓடத்தொடங்கிவிடுகிறது. ஒரே கூச்சலும் ஆரவார ஒலியும் கிளம்புகிறது. திரும்பிப்பார்க்கிறேன். அது ஒரு குதிரைப்பந்தயத்திடல். சுற்றிவரப் பல்லாயிரக்கணக்கானோர் அமர்ந்திருந்து பார்க்கின்றனர். எனக்குப்பின்னால் பத்துப்பதினைந்து குதிரைகளில் ஆட்கள் துரத்தி வருகின்றனர். ஆனால் நான் செல்லும் குதிரையை அவர்களால் நெருங்க முடியவில்லை. கூச்சலும் ஆரவாரமும் இன்னும் உச்சமடைகின்றன. பிறகு பார்த்தால் குதிரையுமில்லை. ஆரவாரம்,கூச்சல் எதுவுமில்லை. சுடுகாட்டுக்கு அருகாமையிலுள்ள கள்ளிக்கூடத்தில் வந்திருக்கிறேன். நானாகப் புறப்பட்டு வந்திருப்பதாகத் தோன்றவில்லை. யாரோ அழைத்து வந்திருக்கிறார்கள் எனத்தோன்றுகிறது. அதுதான் விசாரணை முகாம் என்று முகந்தெரியாத சிலர் சொல்வது கேட்கிறது. ஏன் முகந்தெரியவில்லையென்றால் அது ஒரு மைம்மல் பொழுது. நான் உருளொன்றில் கொண்டுசெல்லப்பட்ட போது காவலுக்கு நின்றவர்கள் ஏதோ என்னிடம் கேட்டனர். எனக்கு விளங்கவில்லை. அவர்கள் எனக்குத்தெரியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல் கடவுள்

## சஞ்சீவி தொடர்கதை - 3

மொழியில் அந்தக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டுமென நினைக்கிறேன். வெளியே தான் மைம்மலாக இருந்ததே தவிர உள்ளே பகல் நேரந்தான். அது வகுப்பறை என்று கூறப்பட்டாலும் வகுப்பறைக்குரிய அடையாளம் ஏதும் இருக்கவில்லை. திரை மறைவில் தான் விசாரணை நடந்து கொண்டிருக்கிறதென நினைக்கிறேன். திரையின் நிறம் கடும்பச்சை. அப்படியொரு பச்சை நிறத்தை நானிதுவரை பார்த்ததேயில்லை. அது எனக்குப் பயத்தைக் கிளப்பி விடுகிறது. திரைக்கு வெளியே என்னைக்காத்திருக்கும்படி யாரோ பின்னாலிருந்து குரல் கொடுக்கிறார். அவரைத் திரும்பிப் பார்க்க வேண்டும் எனத் தோன்றவில்லை. திரைக்குள்ளே ஒரு விசும்பல் கேட்கிறது. அது ஓய்வதற்கிடையில் இன்னொரு சிரிப்பொலி கேட்கிறது. எனக்கு மெதுவாக எழுந்து ஓடிவரத்தோன்றுகிறது. நானொரு சிமெந்து மேடையில் உட்காரவைக்கப்பட்டு இருந்தேன். சற்று நேரத்தின் பின்பாக அந்தச் சிமெந்து மேடையின் நடுவே படிகள் தோன்றிக் கீழிறங்கின. அங்கிருந்து தப்பிச்செல்வதற்கு இதைவிடவும் தக்கதருணம் கிடைக்காதென்பதால் மேடையிலிருந்து மெல்ல மெல்ல படிகளில் இறங்கினேன். அது இன்னொரு நகரத்துக்கு என்னைக்கொண்டு சென்றது.

அது ஒரு விசித்திரமான நகரமாயிருந்தது. அங்கே நான் முதலில் நீண்ட குடும்பி வைத்த வட்டமுகமும், பூனைக்கண்களும், தெற்றுப்பற்களும், குடும்பியின் நீளத்துக்கு வெண்தாடியும் அரையில் கறுப்பங்கியும் அணிந்திருந்த நோக்கர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்துச் சென்றார். அது ஓர் இரவுப் பொழுதாக இருந்தது. எனினும் ஆளையாள் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக மென்னொளியெங்கும் பரவியிருந்தது. ஒடுக்கமான சாலைவழியே நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். 'இப்படியே நிகழ்ந்தால் அதற்கு என்னதான் தீர்வு? இதை அனுமதிக்கவே கூடாது. இதை எதிர்க்கத்தான் வேண்டும். இதென்ன சாதாரண காரியமா? இவர்களெல்லாம் என்ன மாதிரியான ஆட்கள்? இப்படியெங்கேனும் மனிதர்கள் இருப்பார்களா? இவர்களை முதலில் துரத்தியடிக்க வேண்டும்' எனச் சிலர் உரத்துப்பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டேன். இதைப்பற்றி நோக்கரிடம் கேட்டேன். அவர் ஒரு நீண்ட பெருமூச்செறிந்து விட்டு 'வா நேரில் காட்டுகிறேன்' எனக்கூறிக்கொண்டே முன்நடக்க, நான் பின்தொடர்ந்தேன். நாங்கள் ஒரு முடக்கால் திரும்பிப் பிரதான வீதியில் மிதந்து சதுக்கமொன்றை நெருங்கினோம். 'இங்கேயே நின்று கொள்ளலாம். அப்போது தான் நீ கேட்ட கேள்விக்கு என்னால் முழுமையாக பதிலளிக்க முடியும்' என நோக்கர் சொன்னார். நாங்கள் அங்கேயே ஒதுங்கி நின்று கொண்டோம். அங்கிருந்து சதுக்கத்தைத் தெளிவாக நோக்கக்கூடியதாகவிருந்தது. "அங்கே ஒரு தடவை வடிவாகப் பார்" என நோக்கர் சொன்னார். நான் சதுக்கத்தை நுணுக்கமாகப் பார்த்தேன். ஒரு கொடிக்கம்பத்தில் அழகும் வனப்பும் பொழிந்த காராம்பசுவொன்று கட்டப்பட்டிருந்தது. முதல் நோக்கில் சிங்க முகம் கொண்டவர்கள் எனத் தோன்றும் ஒரு தொகுதியினரும் சாதாரண மனித முகம்கொண்டு இன்னொரு தொகுதியினரும் மீசையின்றித் தாடிமட்டும் வளர்த்து தொப்பி அணிந்த பிறிதொரு தொகுதியினருமான மூன்று தொகுதியினராகப் பிரிந்து நின்று விவாதித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.


'அங்கே கொடிக் கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் காமதேனுதான் இந்தத் தேசத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் தாய். சிங்கமுகம் கொண்டவர்களும் மீசையின்றி தாடிமட்டும் வளர்த்து தொப்பி அணிந்துகொண்டிருப்பவர்களும் காமதேனுவின் வளர்ப்புப் பிள்ளைகள். சாதாரண தோற்றத்தில் இருப்பவர்கள் மட்டுமே காமதேனுவால் ஈனப்பட்ட பிள்ளைகள். ஆனால், சிங்க முகம்கொண்டவர்கள் மற்றிரு பகுதியினரைக் காட்டிலும் பல்கிப் பெருகியிருப்பதால் அப்பகுதியினரே இத்தேசத்தை ஆட்சிசெய்து வருகின்றனர். ஆனால், தாங்கள் மட்டுமே இந்தக் காமதேனுவின் சொந்தப் பிள்ளைகள் என்றும் மற்றவர் எல்லாம் வெறும் வளர்ப்புப் பிள்ளைகள் என்றும் சொல்லிவருவதோடு அதற்கான மெய்யற்ற ஆதாரங்களை தொடர்ந்தும் உருவாக்கிக்கொண்டே இருக்கின்றனர். நாங்கள் எல்லாம் இந்தச் சாதாரண தோற்றத்தில் இருப்பவர்களால் எங்களுக்கு விடிவுகாலம் வருமென்று இன்றுவரை நம்பிக்கொண்டுதான் இருக்கின்றோம். அது அவநம்பிக்கைதான் எனத் தெரிந்தும் எங்களுக்கு வேறு வழியில்லாமல் இவர்களை நம்பிக்கொண்டு இருக்கின்றோம். இவர்களோ சிங்கமுகத்தோற்றம் கொண்டவர்களின் நிழலிலே பதுங்கிக்கொண்டு சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு எங்களுக்கு நிச்சயமாக ஒரு விடிவுகாலத்தைக் கொண்டுவந்தே தீருவோம் என்றும், சிங்க முகத் தோற்றம் உடையவர்களுக்கு சார்பாக ஒருபோதும் நடக்கமாட்டோம் என்றும் பசப்பு வார்த்தைகளால் எமது செவிகளைக் குளிர வைத்துக்கொண்டு இருக்கின்றனர். மீசையின்றி தாடிமட்டும் வளர்த்துத் தொப்பியணிந்தோர் மதில்மேல் பூனைகளாகவே இருந்துவருகின்ற போதிலும் அப்பகுதியினரும் சிங்க முகத் தோற்றம்கொண்டவர்களின் நிழலில் ஒதுங்கி சுகபோகம் அனுபவிப்பவர்கள்தான். இப்போது இங்கே நடந்துகொண்டிருப்பது என்னவென்றால், இந்தக் காமதேனுவின் உடற்பாகங்களை ஒவ்வொன்றாக விலைகுறித்து வெளியாருக்கு விற்றுக்கொண்டிருக்கின்றனர். இதை எதிர்ப்பதுபோல் சாதாரண முகத்தோற்றம் கொண்டிருக்கும் எங்களது பிரதிநிதிகள் எங்களை ஏமாற்றி நெடுங்காலமாகவே தொடர் நாடகமொன்றை அரங்கேற்றி வருகின்றனர்' - எனச் சொல்லி முடித்தார் நோக்கர்.

(தொடரும்)

# சிறுவர் கைவண்ணம்

**மாணவர்களே!**
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



க.திஷான்
தரம் 11
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி




S. அபிஷாலினி
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.



உ. வரதவத்சலசர்மா
தரம் 4 B
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.



சு. விதுஷ்னா
தரம் 2C
யா /இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை




பு.ஜீவேந்திரன்
தரம் 7
யா/இந்துக் கல்லூரி



ஸ்ரீ.கபிநயா,
தரம் 4G
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை



கோ. ஹரிதுவாரன்
தரம் :3F
யா/ இந்து ஆரம்ப பாடசாலை



நி.அர்ச்சனா
தரம் - 8
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

## திரிசொல்

### ஒரு பொருள் குறித்த பல சொல்

1. அடி- கழல், கால், தாள், பதம், பாதம்
2. அழகு- அணி, எழில், கவின், சுந்தரம், வடிவு, வனப்பு
3. அன்பு- நேசம், பற்று, பரிவு, பாசம், ஈரம்
4. ஆகாயம்- அண்டம், அந்தரம், உம்பர், சேண், வான், விண், விசும்பு
5. ஆசிரியர்- ஆசான், உபாத்தியாயன், குரவன், தேசிகன்
6. இனம்- கிளை, சுற்றம், பரிசனம்
7. உடம்பு- உடல், காயம், மெய், மேனி, யாக்கை
8. ஒளி- பிரகாசம், காந்தி, சுடர், சோதி
9. நூல்- பனுவல், ஏடு, புத்தகம்
10. சோலை- உபவனம், நந்தவனம், பூங்கா

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**திரை - திரைச்சீலை, அலை**
**திறை- கப்பம், அரசிறை**

**நரை- வெளுத்தமுடி, மூப்பு**
**நறை- தேன், கள், குற்றம், வாசனை**

**நிரை- பசுக்கூட்டம், ஒழுங்கு**
**நிறை- நிறைவு, நிறுத்தலளவு**

அ.கிருஸ்ணி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# எல்லாரும்....

தூதுவரான சூல் ஹெய்ம் பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்திருக்கிறார்... "நோர்வே ஓர் அனுசரணையாளர் மட்டுமே. அனுசரணை என்பது, சந்திக்கும் இடங்களையும் சந்திப்பு நேரங்களையும் ஒழுங்குபடுத்துவது.

சந்திப்புக்கான பயண ஏற்பாடுகளையும் தங்குமிட ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவது என்பவை தான்" என்று அவர் இவ்வாறு கூறிய பின் நிகழ்ந்த மற்றொரு தனிப்பட்ட சந்திப்பில் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியான மார்ட்டி அஹ்ரிசாரி அவர்தான் பலஸ்தீனத்தில் பேச்சுவார்த்தைகளை ஒழுங்குபடுத்தியவர் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளை குறித்து பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்துள்ளார்.

"இரண்டு தரப்பும் சமாதானத்துக்குத் தயாரில்லை என்றால், அந்த இடத்தில் நான் இருந்திருந்தால், இரண்டு பேரையும் வீட்டுக்கு அனுப்பியிருந்திருப்பேன். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்திருக்க மாட்டேன்" என்று. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தேவையான வளங்களை ஒழுங்குபடுத்துவது மட்டும் ஒரு மூன்றாந்தரப்பின் வகிபாகம் அல்ல என்ற பொருளில்.


சூல் ஹெய்ம் மற்றும் மார்ட்டி அஹ்ரிசாரி ஆகியோரின் கூற்றுக்களின் அடிப்படையிலும், ஆயுதப்போராட காலத்தில் நடந்த பேச்சுக்களில் தலையிட்ட மூன்றாந் தரப்புக்களான இந்தியா, நோர்வே (அமெரிக்கா) ஆகிய இரு தரப்புக்களுடனும் தமிழ்த் தரப்பு முரண்படும் ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்ற அனுபவத்தின் அடிப்படையிலும் ஈழத்தமிழர்கள் தொகுக்கப்பட்ட ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஒரு மூன்றாந்தரப்பின் தலையீடு இன்றி இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை, அதேசமயம் ஒரு மூன்றாவது தரப்பின் தலையீடு எனப்படுவது வெறுமனே பிரசன்னமாகவோ அல்லது நடுநிலை வகிக்கும் மத்தியஸ்தராகவோ அல்லது அனுசரணையாளராகவோ இருந்தால் மட்டும் போதாது.

நீதியான சமாதானத்தை நோக்கி அழுத்தங்களைப் பிரயோகிக்குமளவுக்கு ஒரு மூன்றாவது [illegible] பின் வகிபாகம் இருக்கவேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட மூன்றாவது தரப்பை உ[illegible] கொண்டு வருமளவுக்கு தமிழ்த் தரப்பு பேரபலத்[illegible] இல்லை என்பதால்தான் ரணில் மூன்றாவது[illegible] யைக் குறித்து சீரியஸாக இல்லையா? அல்லது [illegible] பேச்சவார்த்தையிலேயே சீரியஸாக இல்லைய[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி- 2

# யாழ்ப்பாணத்து அச்சுக்கலை தொடக்கமும் தொடர்ச்சியும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

பெரும்பாலும் மத நிறுவனங்கள் பழந்தமிழ் நூல்கள், உரை நூல்கள், ஆண்டு அறிக்கைகள் , ஆண்டு மலர்கள் , சமயச் சார்பான சிறு சிறு வெளியீடுகள் முதலியவற்றை அச்சிட்டு வெளியிட்டன . மத நிறுவன அச்சுக்கூடங்களின் பிரதான வெளியீடாக பத்திரிகைகளே அமைந்தன . அமெரிக்க மிஷனரிமார் உதய தாரகையையும் கத்தோலிக்க புனித வளன் அச்சகம் கத்தோலிக்க பாதுகாவலனையும் ,சைவபரிபாலன சபை இந்துசாதனத்தையும் வெளியிட்டன . இப் பத்திரிகைகள் தங்கள் தங்கள் சமயம் சார்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்ததோடு கலை இலக்கிய விடயங்கள் , கட்டுரைகள் , செய்திகள் , கடிதங்கள் , கண்டனங்கள் , விளம்பரங்கள் , மரணசங்கதிகள் எனப்பலவற்றையும் பிரசுரித்தமை குறிப்பிடத்தக்கது . நிறுவனங்களினூடு மாத்திரமன்றித் தனியார் அச்சுக் கூடங்களில் இருந்தும் பத்திரிகைகள் வெளிவந்தன . அச்சியந்திரம் பாவனைக்கு வந்த காலத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதி வரை யாழ்ப்பாணத்தில் இருந்து பல பத்திரிகைகள் வெளிவந்தன . பத்திரிகைகளை வெளியிட்ட அச்சக உரிமையாளர்கள் கல்விப்புலமை மிக்கவர்களாக விளங்கினர் . குறிப்பாக ஆங்கில அறிவும் , பொதுசனத் தொடர்பும் இவர்களுக்கு இருந்தமை பத்திரிகையைச் சிறப்புற நடத்த உதவியது .

இக் காலத்திலே தனியார் அச்சுக்கூடங்களில் இருந்து வெளிவந்த பெரும்பாலான பத்திரிகைகளுக்கு உரிமையாளரே பத்திராதிபராகவும் இருந்தார் . அச்சக உரிமையாளர்கள் தமது அறிவாற்றலையும் மற்றைய அறிஞர்களின் ஆக்கங்களையும் பதிவு செய்து வெளியுலகுக்குக் காட்ட விரும்பினர் . அத்துடன் காலனித்துவ அரசின் நடவடிக்கைகளைப் பாராட்ட வேண்டியவிடத்து பாராட்டியும், விமர்சிக்க வேண்டியவிடத்து விமர்சித்தும் பத்திரிகைகளை வெளியிட்டனர் . 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் , இருந்து வெளிவந்த பத்திரிகைகள் தமிழர் சிந்தனை மரபில் ஏற்படுத்திய மாற்றம் பற்றிச் சின்னத்தம்பி பத்மராசா என்பவர் ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது . யாழ்ப்பாணத்திலே அச்சக உரிமையாளரகவும் பத்திராதிபர்களாகவும் பலர் விளங்கியுள்ளனர். சான்றாக ஒருசிலரைச் சுட்டிக்காட்டலாம் . வல்வை வயித்தியலிங்கம்பிள்ளை , அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளை , கல்லடி வேலுப்பிள்ளை , ஆ.முத்துப்பிள்ளை , வதிரி சி.தாமோதரம்பிள்னை , வேலணை வி. கந்தப்பிள்ளை , நல்லூர் மாணிக்கம் முதலியோரை வகை மாதிரிக்குச் சுட்டிக் காட்டலாம் (நினைவுக்கு வந்தவர்களையே மேலே குறிப்பிட்டோம் )
யாழ்ப்பாணத்திலே அச்சகங்கள் இயங்கத்தொடங்கியதும் பலவிடயங்கள் வளர்ச்சியும் நிலைபேறும் பெற்றன. உதாரணமாகச் சிலவற்றை சுட்டிக்காட்டலாம் . பாடநூல்கள் , பழைய நூற் பதிப்புக்கள் , உரைநூல்கள் , இலக்கிய இலக்கண ஆய்வுநூல்கள், நிகண்டுகள் , அகராதிகள் எனப் பரந்துபட்ட தளத்திலே அச்சியந்திரச் செயற்பாடுகள் அமைந்தன , கல்வி விருத்தியாகியது . பாடசாலைகள் பல நிறுவப்பட்டன . மாணாக்கர்களுக்குப் பாடநூல்கள் பெருமளவுக்குத் தேவைப்பட்டன . முதன் முதலிலே தமிழ்ப் பாடநூல்களை அமெரிக்கமிஷன் அச்சுக் கூடமே வெளியிட்டது . கிறிஸ்தவ மதப்பரப்புதலுக்கு ஏற்ற வகையிலேயே மிஷனரிமாரின் பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டன . இதனைக் கண்ட நாவலர் சைவப்பிள்ளைகளுக்கான பாடநூல்களைத் தமது அச்சகத்தினூடு வெளிக்கொணர்ந்தார் . சமயப் பிரசாரமற்ற வகையிலே தமிழ்மொழியைச் செம்மையாக எழுதவும் பேசவும் தக்கதாக நாவலரின் பாலபாடங்கள் அமைந்தன . நாவலரின் பாலபாடங்களை வ.வே.சு. ஐயர் பாராட்டியுள்ளமையைச் சுத்தானந்தபாரதியார் சுட்டிக்காட்டியுள்ளார் . தமிழ் , சமயம் , பூமிசாத்திரம் முதலான பாடநூல்களை நாவலர் எழுதி வெளியிட்டுள்ளார் . அச்சியந்திரத்தின் வருகை இதனைச் சாதித்தது. ஈழத்துத் தமிழ்ப் பாடநூல்வரலாற்றிலும் நாவலருக்கு அழியாத இடம் உண்டு . கல்வி உளவியல் உன்னத நிலையை அடைந்திருக்கும் இக்காலத்திலே கூட நாவலரின் பாலபாடத்தின் அமைப்பினையும் முறையியலையும் அறிஞர் பலர் பாராட்டுகின்றனர் .
நாவலரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலே பாடநூல்களைப் பல அச்சுக்கூடங்கள் வெளியிட்டன . அவற்றைப் பட்டியல் இடுவது நமது நோக்கம் அன்று. எனினும் முக்கியமான சில அச்சகங்களைச் சுட்டிக்காட்டலாம் . கலாபவன அச்சகம் - பருத்தித்துறை , திருமகள் அழுத்தகம் - சுன்னாகம் , கலைவாணி புத்தக நிலையம் யா- ழ்ப்பாணம் , ஸ்ரீ லங்கா புத்தகசாலை =யாழ்ப்பாணம் முதலான அச்சுக்கூடங்கள் பல பாடப் புத்தகத் துறையிலே அதிக ஆர்வத்துடன் செயற்பட்டன . அச்சகத்துடன் இணைந்த புத்தகவியாபார நிலையங்களையும் அமைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது . இதனாலே அச்சகம் ஒரு வணிக நிலையமாகவும் விளங்கியுள்ளது .
யாழ்ப்பாண அச்சுக்கூடங்களிற் சில பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டன . பழைய புராணங்களுக்கு உரை எழுதி வெளியிட தும்பளை சுப்பிரமணிய சாஸ்திரிகள் , வல்வை வைத்திலிங்கம்பிள்ளை முதலானோர் தங்கள் அச்சுக்கூடங்களைப் பயன்படுத்தினர் . யாழ்ப்பாணத்துக் கந்தபுராண கலாசாரத்துக்கு அரண்சேர்ப்பதாகக் கந்தபுராணத்தை உரையுடனும் , உரையில்லாமலும் பல அச்சகங்கள் வெளியிட்டன . பெரும்பாலான அச்சக உரிமையாளர்கள் நாவலர் காட்டிய வழியிலேயே தமது பணிகளை முன்னெடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது .

தனியார்கள் நடத்திய பெரிய அச்சுக்கூடங்களிலே பணியாற்றி அனுபவம் பெற்ற சிலர் சிறிய அச்சுக்கூடங்களைத் தத்தமது ஊரிலே நிறுவினர். இவர்கள் பெரிய அச்சுப்பணியைச் செய்யாவிட்டாலும் ஊருக்குத் தேவையான அச்சு வேலைகளை செய்து கொடுத்தனர் . தனி ஒருவர் முதலாளியாகவும் தொழிலாளியாகவும் செயற்பட்ட அச்சுக்கூடங்களும் யாழ்ப்பாணத்திலே இருந்தன . இந்த அச்சுக்கூடங்கள் பெரும்பாலும் திருமண வாழ்த்து மடல்கள் , அழைப்பிதழ்கள் , சரமகவி வெளியீடுகள் , விளம்பரங்கள் , (நாடகம் , கூத்து , திருவிழா முதலியன ) கோயில் சார்ந்த ஊஞ்சல் முதலான பதிகங்கள் முதலானவற்றை அச்சிட்டு வெளியிட்டன . இங்கு அச்சு தொழிலாகவே கருதப்பட்டது . எனினும் ஈழத்து இலக்கிய வரலாற்றிலே இத்தகைய சிறிய அச்சுக் கூடங்களுக்கும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு . யாழ்ப்பாணத்து அரைவாய்மொழிப் பாடல்கள் பற்றி ஆய்வு செய்வோர் இச்சிறு அச்சுக்கூடங்களைத் தவிர்த்துவிடமுடியாது .
யாழ்ப்பாணத்து அச்சுக்கலை வரலாற்றில் நிறுவனங்கள் நடத்திய அச்சகங்களின் பணிகள் பெரும்பாலும் நேர்த்தியானவையாகவே இருந்தன . இதுபற்றி ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.
தனியார்கள் நிறுவிய அச்சுக்கூடங்களிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பல அச்சகங்கள் இருந்தன . இவை அச்சுக்கலை நுட்பம் , அச்சுக்கலை அழகியல் முதலானவற்றை பேணி ,நின்று நிலைக்கக் கூடிய நூல்கள் , சஞ்சிகைகள் , ஆண்டு மலர்கள் முதலானவற்றை வெளியிட்டன . வகை மாதிரிக்கு திருமகள் அழுத்தகத்தினைச் சுட்டிக்காட்டலாம் . இதன் உரிமையாளர் திரு . நா , பொன்னையா , இவர் பர்மாவிலே அச்சுக்கலையிற் பயிற்சி பெற்றவர் என்று கனக செந்திநாதன் தாமெழுதிய 'ஈழம் தந்த கேசரி' என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார் . திரு . நா . பொன்னையா ஈழகேசரி எனும் பத்திரிகையை நடத்தியதால் இன்றும் அவரை 'ஈழகேசரிப் பொன்னையா' என்றே அழைக்கின்றனர் .
திருமகள் அழுத்தகம் ஈழகேசரியோடு பாடநூல்கள், பழந்தமிழ்நூல்கள் , உரை நூல்கள் , உரைநடைநூல்கள் , ஆய்வு நூல்கள் எனப் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டது திருமகள் அழுத்தகத்தின் அச்சுப்பதிப்பின் உச்ச வெளிப்பாடாக கணேசையரின் தொல்காப்பிய உரை விளக்கக்குறிப்புக்களைக் குறிப்பிடலாம் . கணினி அச்சு முறைமை நடைமுறைக்கு வராத காலப்பகுதியிலேயே கணினியிற் செய்வது போன்று திருமகள் அழுத்தகம் கணேசையரின் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புக்களைப் பதிப்பித்துள்ளது என்று பலரும் பாராட்டுகின்றனர் .
கொழும்பு, மட்டக்களப்பு முதலான இடங்களில் இருந்து வந்தும் யாழ்ப்பாண அச்சகங்களில் நூல்களை அச்சிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . கொழும்பு மாநகரசபையின் பொன்விழா மலர் , பண்டிதர் வி.சி. கந்தையாவின் மட்டக்களப்புத் தமிழகம் முதலான நூல்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்திலே அச்சிடப்பட்டுள்ளமையைச் சான்றாகக் காட்டலாம் . கற்பிட்டியில் வாழ்ந்த சைமன் காசிச் செட்டியின் 'தமிழ் புளூராக் ', மானிப்பாய் ஸ்திறாங் அஸ்பரி அச்சுக்கூடத்திலே அச்சிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது .
1835 ஆம் ஆண்டு சுதேசிகளும் அச்சுக் கூடம் நிறுவித் தங்கள் தாய்மொழியில் அச்சு நூல்களை வெளியிடலாம் என்ற அனுமதியை வழங்கிய காலனித்துவ அரசு இங்கு நிறுவப்படும் அச்சகங்களையும் அவை வெளியிடுபவைகளையும் , கண்காணிக்கும் வகையிலே அச்சகக் சட்டம் ஒன்றை வெளியிட்டது.
இந்தச் சட்டத்தின் படி முதலிலே அச்சுக் கூடத்தைப் பதிவு செய்யவேண்டும் . பதிவு செய்யும் பொழுது அச்சகம் நிறுவியவரின் பெயர் ,இடம் என்பன இடம்பெற வேண்டும் . அத்துடன் வெளியீடு செய்பவைகளில் நூலின் பெயர் , நூலாசிரியர் பெயர், பதிப்பாளர் பெயர் , பதிப்பிக்கப்பட்ட இடம் , பதிப்பு ஆண்டு என்பன முற்பக்கத்திலே அச்சடிக்கப்பட வேண்டும் . அச்சடிக்கப்படாவிடில் 5000 ரூபா வரையில் தண்டம் அறவிடப்படும் எனக் காலனித்துவ அரசு அறிவித்தது . இத்தகைய சட்டத்தினை இயற்றிச் சுதேசிகளின் பதிப்பு , வெளியீட்டுத்துறையைத் தமது கட்டுப்பாட்டில் , கண்காணிப்பில் வைத்திருக்க காலனித்துவ அரசு விரும்பியதென்பது தெளிவாகின்றது . இந்த நடைமுறை சில மாற்றங்களுடனும் சில சேர்க்கைகளுடனும் இன்றும் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது .

யாழ்ப்பாணத்திலே 1892 ஆம் ஆண்டு வெளியான கும்மிப்பாடல் நூல் ஒன்று மேற்குறிப்பிட்ட விதியை மீறியதற்காகவும் தனிப்பட்டவர்களின் சொந்த விடயங்களைப் பாடு பொருளாக்கியமைக்காகவும் நீதிமன்றத்தால் தடைசெய்யப்பட்டது . அந் நூலை வைத்திருப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது . அத்துடன் அந் நூலை எழுதி அச்சிட்டவருக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
யாழ்ப்பாணத்திலே அச்சுப்பணியில் ஈடுபட்ட அச்சகங்களின் வரலாற்றையும் நிறுவியோரின் பின்னணியையும் அந்த அச்சகங்களில் இருந்து வெளிவந்த நூல்கள் , துண்டுப்பிரசுரங்கள் , பத்திரிகைகள் , விளம்பரங்கள் , அறிக்கைகள் முதலானவற்றையும் நுனித்து ஆராய்ந்தால் ஒரு காலகட்டத்து யாழ்ப்பாணத்தின் சமய , சமூக , அரசியல்,பண்பாட்டுப் பின்னணியைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம் . ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றை , அதன் போக்கை அறிந்து கொள்ள அக்காலத்திலே ஈழநாட்டில் நிறுவப்பட்ட அச்சகங்களின் (தமிழ் நாடு உட்பட ) செயற்பாட்டையும் அவை வெளியிட்ட வெளியீடுகளையும் நுனித்து ஆராய்ந்தறிதல் அவசியமெனலாம் .

### ஆரம்பகால அச்சுக்கூடங்களின் பட்டியல்
( முழுமையானவை அல்ல)

| | |
|---|---|
| புனித வளன் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| திருமகள் அழுத்தகம் | சுன்னாகம் |
| கலைவாணி அச்சகம் | யாழ்ப்பாணம் |
| இலங்காபிமானி அச்சியந்திரசாலை | சாவகச்சேரி |
| ஆசீர்வாதம் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| லங்கா அச்சகம் | யாழ்ப்பாணம் |
| செட்டியார் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| ஸ்ரீ சண்முகநாத அச்சகம் | யாழ்ப்பாணம் |
| நாமகள் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| சோதிடப்பிரகாச யந்திரசாலை | கொக்குவில் |
| ஸ்ரீ பாஸ்கரா யந்திரசாலை | வண்ணார்பண்ணை |
| சண்முகநாதன் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| அமெரிக்க மிஷன் அச்சுக்கூடம் | யாழ்ப்பாணம் |
| கலாநிதி அச்சியந்திரசாலை | பருத்தித்துறை |
| விவேகானந்த அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| சைவப்பிரகாச யந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| நாவலர் அச்சுக்கூடம் | யாழ்ப்பாணம் |
| சச்சிதானந்த யந்திரசாலை | சங்கானை |
| பார்வதி அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| றிப்ளி ஸ்திறொங் ஆஸ்பெரி அச்சகம் | யாழ்ப்பாணம் |
| இன்டஸ்ரியல் ஸ்கூல் பிறஸ் | கொழும்புத்துறை |
| சோதிட விலாச இயந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| கைத்தொழிற் பாடசாலை இயந்திரசாலை | கொழும்புத்துறை. |
| ஜயசிறி சாரதா பீடேந்திரசாலை | வயாவிளான் |
| வித்தியானுபாலன யந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| ஜோதிரத் நாகர அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| கமலாசினி பிறஸ் | யாழ்ப்பாணம் |
| ஆனந்தகுமரன் அச்சகம் | வயாவிளான் |
| இலங்கை மிஷன் பிறஸ் | மானிப்பாய் |
| ஸ்ரீ கணேசா அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| சவரிமுத்து அன் சன் அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| நடராசா அச்சியந்திரசாலை | வேலணை |
| செந்தமிழ்ப் பரிபாலன யந்திரசாலை | வண்ணார்பண்ணை |
| நல்லையா அன் சன்ஸ் அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| ஞானப்பிரகாசஅச்சியந்திரசாலை | அச்சுவேலி |
| சூசை மாமுனிவர் கத்தோலிக்க அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| அமெரிக்க இலங்கை மிஷன் பிரஸ் | தெல்லிப்பழை |
| மெய்கண்டான் அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| மோடேன் பிறின்ரேஸ் | யாழ்ப்பாணம் |
| ஆனந்தா அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| தமிழ் நேஷனல் அச்சியந்திரசாலை | யாழ்ப்பாணம் |
| தையல்நாயகி அச்சுக்கூடம் | யாழ்ப்பாணம் |
| சென்ஜோசெப் கத்தோலிக்க அச்சகம் | யாழ்ப்பாணம் |
| ஸ்ரீகாந்த அச்சகம் | யாழ்ப்பாணம் |
| கிராந்தப் பிரகாச இயந்திரசாலை | யாழ்ப்பாணம், |
| தமிழன் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| றோமன் கத்தோலிக்க மிஷன் அச்சகம் | யாழ்ப்பாணம் |
| சென் பிலோமினா பிறஸ் | யாழ்ப்பாணம் |
| கொமேஷல் பிறஸ் | யாழ்ப்பாணம், |
| வை . சை . மௌனானந்த அச்சியந்திரசாலை | கீரிமலை |
| இலங்கைநேச முத்திராட்சரசாலை | யாழ்ப்பாணம் |
| தாரகா அச்சியந்திரசாலை | காரைநகர் |
| ஞானசித்தி அச்சியந்திரசாலை | வதிரி, கரவெட்டி |
| வச்சிர இயந்திரசாலை | மயிலிட்டி |
| திருஞானசம்பந்தர் அச்சுக்கூடம் | யாழ்ப்பாணம் |
| A.C.M அச்சகம் | யாழ்ப்பாணம் |
| S.J.C.P அச்சகம் | யாழ்ப்பாணம் |
| மாணிக்கவாசகர் அச்சகம் | காரைநகர் |
| சரஸ்வதி அச்சகம் | பருத்தித்துறை |
| ஊழியன் அச்சகம் | பருத்தித்துறை |
| சிவகுக அச்சகம் | பருத்தித்துறை |
| பாரதி அச்சகம் | வண்ணார்பண்ணை |
| பாரதிநிலைய முத்திராட்சரசாலை | வல்வை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலாலா:
## என்றொரு கல்வியில் மாயக்காரி

○ கோகுலராகவன்

26




உலகில் கல்வியியலாளர்கள் பலர் தோன்றி இருக்கிறார்கள். ஆனால் கல்விப் போராளிகள் மிக குறைவு.
ஒரு கல்விப் போராளி பாகிஸ்தானில் தோன்றினாள்.
அவள்தான் மலாலா யூசுப்சாய்.
1997 இல் பிறந்த இளம் கல்விப் போராளி மலாலா யூசுப்சாய் பெண்கள் கல்வி உரிமைக்காகப் போராடிய ஒருத்தி.
பாகிஸ்தானின் உள்நாட்டு அரசியல் எப்போதும் குழப்பம் நிறைந்தது. அங்கு தீவிரவாதம் எப்போதும் இருக்கும்.
அந்தத் தீவிரவாதத்தின் வெளிப்பாடுகளில் ஒன்று பெண்கள் கல்வி உரிமை மறுக்கப்பட்ட தீவிரவாதம்.
இன்னும் பெண்களுக்கு எதிரான மாய உலகங்கள் இருக்கவே செய்கின்றன. இதற்கு எதிராக தன்னுடைய எதிர்ப்பையும் ஆதங்கத்தையும் மலாலா பி.பி.சி. யில் புனைபெயரில் உருது மொழி மூலம் வழங்கத் தொடங்கியதே அவளது உரிமைப் போராட்டத்தின் ஆரம்பம்.



இதன் தொடர்ச்சியாக ஒரு முறை ரைம்ஸ் பத்திரிகையில் அவளது நேர்காணல் வெளிவந்த போது அவளது முகம் வெளிப்பட்டது. இதுவே ஆபத்தையும் கொண்டு வந்தது. தலிபான்கள் பெண்கள் மீதான அடக்குமுறைக்கு பேர்போனவர்கள்.
மலாலா கல்வி கற்பதோ, அதற்கு ஆதரவாகப் பேசுவதோ அவர்களுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. 2012 இல் மலாலா பள்ளியால் வரும் பஸ்ஸில் ஏறி" யார் மலாலா"? என்று கேட்டு சுட்டார்கள். மலாலா தானாகவே தன்னை அடையாளப்படுத்தி சூடு வாங்கிக் கொண்டாள். இல்லாவிட்டால் அனைவரையும் கொல்லப்போவதாக மிரட்டினார்கள்.
எந்த தயவு தாட்சணியமும் இருக்கவில்லை. மலாலா தலையில் பலத்த காயத்தோடு உயிருக்கு போராடி பிழைத்துக்கொண்டாள். தலிபான்கள் செய்த முட்டாள்தனம் என்னவென்றால் சுட்டவர்கள் ஒழுங்காகச் சுடவில்லை. உயிர் பிழைத்துக்கொண்ட மலாலா உலகப்புகழ் அடைய இதுவே பெரிய விளம்பரம் ஆகியது. தலிபான்கள் செய்த மிகப்பெரிய சாதனை இது ஒன்று மட்டுமே. இதன் தொடர்ச்சியாக .இந்த சம்பவம் மக்கள் மனதில் பெரும்அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. இரண்டு மில்லியன் மக்கள் பாகிஸ்தான் தேசிய காங்கிரஸுக்கு முறைப்பாட்டு விண்ணப்பம் செய்தபின் 'அனைவருக்கும் கல்வி 'என்ற சட்டத்தை தேசிய காங்கிரஸ் நிறைவேற்றியது. இது மலாலாவின் வெற்றியே. உலக நாடுகள் முழுவதும் தலிபான்களின் செயலை வன்மையாக கண்டித்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் பாகிஸ்தானும் கண்டனம் தெரிவித்ததுதான். ஏனென்றால் தலிபான்களை நாட்டில் இருந்த விரட்ட ஒருபோதும் பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்ததில்லை.
எப்போதும்"எங்கப்பன் குதிருக்குள் இல்லை"என்ற மாதிரி மறுப்பு தெரிவிக்கும்.பின்லேடனை அமெரிக்கா பாகிஸ்தானில் வைத்து சுட்டுக் கொல்லும் வரைக்கும் இதுதான் நடந்தது.
மலாலா இதன் பின் தீவிரமாகச் செயற்படத்தொடங்கினாள் என்பதே உண்மை.
2014 இல் மலாலாவுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.இதன் போது மலாலாவுக்கு பதினேழு வயது மட்டுமே. உலகில் மிகக்குறைந்த வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமையையும் தேடிக்கொண்டாள்.மறுக்கப்பட்ட கல்வியை இதன் பின் மலாலா கற்கவும் தொடங்கினாள்.2020 இல் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியாக பட்டம் பெற்றுவிட்டாள்.
பாகிஸ்தானில் விரல் விட்டு எண்ணக்கூடிய பெண் பட்டதாரிகளில் மலாலாவும் ஒருத்தி.
மலாலாவைப்பற்றி Davis Guggenheim என்னும் அமெரிக்க இயக்குநரால் "He named me malala "என்ற விவரணப்படம் வெளிவந்து பல விருதுகளைப் பெற்றுக்கொண்டது.
மலாலா தன்னுடைய அனுபவங்களை நூலாகவும் எழுதத்தொடங்கினாள்.
I am malala, malala's magic pencil,we are displaced true stories of refugee lives ஆகிய நூல்கள் மலாலாவினால் எழுதப்பட்டிருக்கின்றன. 2021 இல் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் அசீர் மாலிக் என்பவருடன் மலாலாவுக்கு திருமணம் நடந்தது. இந்த நூற்றாண்டில் நடமாடும் நேரடிக் கல்விப் போராளி மலாலா என்ற வீர யுவதியே .
தலிபான்களின் கொடூரமான பக்கங்களை வெளி உலகுக்கு கொண்டு வந்ததில் மலாலாவின் பங்கு முக்கியமானது




(இன்னும் கதைப்பம்)

குறிப்பு: யாழ்ப்பாண வரலாற்று தொடரில் தற்போது இடம் பெற்று வரும் சம்பவங்கள் யாவும் (Seven Years in Ceylon)நூலாசிரியரின் கருத்துகளே. கட்டுரையாளரின் கருத்துக்கள் எதுவுமில்லை.கட்டுரையாளர் மொழிபெயர்ப்பை மட்டுமே செய்து வருகிறார். )

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை


○ ந.பரமேஸ்வரன்

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிகள் அரசாங்க வேலையை விட போதகர்களாக வருவதையே விரும்புகின்றனர். இவர்கள் குறைந்த சம்பளத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள 22 தேவாலயங்களில் போதகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பிரசிடென்சி கல்லூரியில் சமயப்பணியில் ஈடுபடும் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் அதிகம் என்றும், அவர்களை அரச சேவையில் இணைந்து கொள்ளுமாறும் அரசு அறிவுறுத்தியிருந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிகள் அரசாங்க வேலையை விட சமயப்பணி செய்வதையே கூடுதலாக விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்தில் பேசப்படும் தமிழ் மொழியே தென்னிந்தியாவிலுள்ள 16 மில்லியன் மக்களாலும் பேசப்படுகிறது. யாழ்ப்பாணக்கல்லூரி உள்ளூர் கிறிஸ்தவர்களை உருவாக்கும் மையமாகச் செயற்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று சபைகளில் 50 பைபிள் வாசிக்கும் பெண்கள் பணி புரிகின்றனர். இவர்களுக்கு 8 தொடக்கம் 16 ஷில்லிங் சம்பளம் வழங்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் விதவைகள். இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இவர்களது குடும்பத்தைப் பராமரிக்க உதவுகிறது. இவர்களது மூத்த ஆண் பிள்ளைகள் சபைப் பணிகளில் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. ஞாபகார்த்தப் புலமைப்பரிசில்களும் வழங்கப்படுகின்றன. ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் வழங்க விரும்புவோர் 100 ஸ்டேர்லிங் பவுண் செலுத்த வேண்டும். ஒரே தடவையில் 100 ஸ்டேர்லிங் பவுண் செலுத்த முடியாதவர்கள் ஐந்து வருடங்களில் ஆண்டுக்கு 20 ஸ்டேர்லிங் பவுண் வீதம் செலுத்தலாம். புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் கொடையாளர்களுக்கு ஆண்டுதோறும் தமது கணக்கு விபரங்களை அனுப்பவேண்டும்.

கிறிஸ்தவ மாணவர்களுக்கு மட்டுமே புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததும் ஒரு வருடத்துக்கு இலங்கையிலோ இந்தியாவிலோ சமயப்பணிகளில் ஈடுபடுவதாக உடன்படிக்கை ஒன்றில் ஒப்பமிட வேண்டும். இவ்வாறு சமயப்பணிகளில் ஈடுபட முடியாதவர்கள் தாம் பெற்றுக்கொண்ட புலமைப் பரிசில் பணம் முழுவதையும் திருப்பிச் செலுத்தவேண்டும்.

கிறிஸ்தவர்கள் இல்லாத நாட்டில் நாங்கள் ஒரு மரத்தை நாட்டியுள்ளோம். அது நாங்கள் புழுதிக்குள் உறங்கினாலும் அல்லது இவ்வுலகை விட்டுச்சென்றாலும் கிறிஸ்துவின் அருளைப் பரப்பிக்கொண்டிருக்கும். வட இலங்கையில் பத்து திருச்சபைகள் 316,000 பேருக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றன.நாங்கள் எமது மாவட்டத்தில் உள்ள20,000 பேருக்கு சேவை செய்து வருகிறோம். 2,000 மாணவர்களுக்கு 26 பாடசாலைகள் ஊடாக கல்வியை வழங்கி வருகிறோம். சராசரியாக ஒவ்வொரு பாடசாலையிலும் 200 மாணவர்கள் படிக்கின்றனர். பெரும்பாலானவை ஆங்கிலப் பாடசாலைகள். உயர்சாதி மாணவர்கள் எமது திருச்சபை இல்லத்துக்கு வந்து வேதாகம வகுப்புகளிலும் பங்குபற்றுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இந்துக் குடும்பங்களிலிருந்தே வருகின்றனர் .வரும் போது நெற்றியில் விபூதி பூசிக்கொண்டே வருகின்றனர். இவர்களில் அநேகமானோர் யாழ்ப்பாணக் கல்லூரியில் அனுமதி கோருகின்றனர். அனைவரையும் யாழ்ப்பாணக்கல்லூரியில் உள்வாங்க முடியாது. இவர்களை இந்தியாவிலுள்ள இந்துப் பாடசாலைகளுக்கு தான் அனுப்ப வேண்டியுள்ளது. இந்தியாவில் கல்விகற்கும் காலத்தில் இவர்கள் இந்துக்களின் வீடுகளிலேயே தங்குகின்றனர். இந்துச் சூழலிலேயே வசிக்கின்றனர். (நூலாசிரியர் இந்துக்களைப்பற்றி குறிப்பிடுகையில் பெரும்பாலும் Heathen என்ற சொல்லையே பயன்படுத்தியுளார்.நான் Heathen



A PROFESSOR AND STUDENTS IN THE JAFFNA COLLEGE.

என்ற சொல் பாவிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்து என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளேன். Heathen என்றால் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் என்று பொருள்) எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 14 மாண்வர்கள் கும்பகோணத்துக்கு மேற்படிப்புக்காக சென்றனர். இவர்கள் அங்கு விபூதி பூசவும் இந்து சமய நூல்களை வாசிக்கவும் பழகினர்.

கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு வழிபடுவதற்குச் செல்வதற்கு இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. திரும்பி வந்த போது இவர்கள் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாகவும் கிறிஸ்தவ மதத்தை தூற்றுபவர்களாகவும் கேலி செய்பவர்களாகவுமிருந்தனர். எமது விடுதிப்பாடசாலைகளில் தங்கி கல்வி கற்கும் மாணவிகளுக்கு இவர்களையே திருமணம் செய்து வைக்கவேண்டிய நிலை. நாங்கள் யாழ்ப்பாணத்தில் எமது பாடசாலைகளில் கல்விகற்ற பின்னர் மதுரை, திருச்சி, நாகபட்டினம் போன்ற இடங்களில் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களை பார்க்கப்போனோம். இவர்கள் கடும் பிற்போக்குவாதிகளாகக் காணப்படுகின்றனர். இவர்கள் யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் தமது இதயத்தை கிறிஸ்துவிடம் ஒப்படைத்திருந்தார்கள். இந்தியாவில் கல்வி கற்ற காலத்தில் இவர்களிடையே இந்து மதத்தின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. இவர்கள் இவ்வாறு மாறி வருவது எமக்கு மனவேதனையை ஏற்படுத்தியது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org